Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 17 செவ்வாய்க்கிழமை (01.07.2014) பக்கங்கள் 20 ஓசை –273

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# வடக்கில் சமூகநலத் திட்டங்கள்
# அவுஸ்ரேலியா நிதியுதவி

(கொழும்பு)

வடக்கில் சமூகநலத் திட்டங்களுக்கு அவுஸ்ரேலிய அரசு உதவி வழங்கத் தீர்மானித்துள்ளது. இந்த உதவித் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

அத்துடன் நாடு முழுவதும் சுமார் 13 பாரிய சமூகநலத் திட்டங்களுக்காக அவுஸ்ரேலிய அரசாங்கம் நிதியுதவியை வழங்கியுள்ளது. இந்தத் திட்டங்களுக்காக 27 மில்லியன் ரூபாவை அவுஸ்ரேலிய அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இவை நாட்டிலுள்ள 12 தொண்டு நிறுவனங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மலையகம் உட்பட்ட பிரதேசங்களிலும் கல்வி வளர்ச்சி,

பெண்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி, போரின் பின்னர் இயல்பு வாழ்க்கைக்கான முயற்சிகளுக்கே இந்த நிதியுதவி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஞானசார தேரரின் அமெரிக்க விசா வாபஸ்

(கொழும்பு)

பொதுபலசேனா அமைப் பின் பொதுச்செயலாளர் வண. கலகொட அத்தே ஞானசார தேரருக்கு, அமெரிக்காவால் வழங்கப்பட்டிருந்த விசா வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தீர்மானத்திற்கு அமைவாகவே அவருடைய விசா வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் வண. கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவிக்கையில், எனக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வேண்டும்

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு அகற்றப்பட்ட பொலிஸ் பாதுகாப்புத் தொடர்பாக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதமொன்று நேற்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மேற்படி விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பொலிஸ்மா அதிபருக்கு நாம்

19 ஆம் பக்கம் பார்க்க

## சுத்திகரிப்பு ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தம்

### வவுனியா நகரசபை முன்றலில் போராட்டம்



(வவுனியா)

வவுனியா நகரசபையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது உட்பட 12 கோரிக்கைகளை முன்வைத்து நகர சுத்திகரிப்பு தொழிலாளிகள் நேற்று வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் ஆதரவுடன் இடம்பெறும் இப்போராட்டத்தில் வவுனியா நகரசபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சுகாதார தொழிலாளர்களில் 7 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க

19 ஆம் பக்கம் பார்க்க

## இரத்மலானை பள்ளிவாசலுக்கு தீ மூட்டும் முயற்சி

### பொதுமக்கள் திரண்டதால் அனர்த்தம் தவிர்ப்பு

(கொழும்பு)

இரத்மலானை கந்தவல வீதியிலுள்ள தாளயபம் பாவா ஜும்மா பள்ளிவாசலை தீக்கிரையாக்கச் சிலர் மேற்கொண்ட முயற்சி அப்பகுதி மக்களினால் முறியடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பள்ளிவாசலின் வாயில் கதவருகில் பழைய ஆடைகளில் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டுத் தீ மூட்டப்பட்டுள்ளது.

பழைய ஆடைகள் எரிந்து கதவுக்கு தீ பரவியதால் பள்ளிவாசலில் தீப்பிளம்பு கிளம்புவதையும் புகைவருவதையும் கண்ட அப்பகுதி மக்கள், உடனடியாக அங்கு விரைந்து சென்று தீயை நீர் ஊற்றி அணைத்து பெரும் அனர்த்தத்தை தடுத்து விட்டனர்.

இதனால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## கருங்குளவிகள் கொட்டியதால் சாவகச்சேரியில் 10 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக கருங்குளவி கூலைந்து வீதியால் சென்றவர்களையும் வைத்தியசாலை வளாகத்துக்குள் நின்றவர்களையும் கலைத்து கலைத்துக் கொட்டியது. இதில் 10 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றுள்ளது. குளவி கொட்டியதில் டச்சு றோட், சாவகச்சேரியைச் சேர்ந்த ஆர்.யாழினா (வயது - 17), மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கே.பேரின்பரதி (வயது - 55), கெற்பேலி மேற்கைச் சேர்ந்த மா.சுரேஸ்குமார் (வயது - 33), நுணாவிலைச் சேர்ந்த சி.நவரெத்தினம் (வயது - 67), இயக்கச்சியைச் சேர்ந்த வி.சுதாகரன் (வயது - 43), கல்வயலைச் சேர்ந்த நா.கைலாயப்பிள்ளை (வயது - 65), கண்டியைச் சேர்ந்த எஸ்.ஜெயந்தன் (வயது - 43), சங்கத்தானையைச் சேர்ந்த சகோதரிகளான பா.மச்சேந்திரராணி (வயது - 48), அ.மச்சேந்திரதேவி (வயது - 53) மற்றும் சி.ஐங்கரன் (வயது

19 ஆம் பக்கம் பார்க்க

## மீன்பிடி அமைச்சர்களுக்கு இன்று மாநாடு

(கொழும்பு)

நாட்டின் ஒன்பது மாகாண சபைகளின் மீன்பிடித்துறை அமைச்சர்கள் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்று முதன்முறையாக இன்று பத்தரமுல்ல தலவத்துகொட

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் ஐ.நா. விசாரணை சவால் நிறைந்ததாக இருக்கும்

### பின்லாந்து முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு



(ஜெனிவா)

யுத்தம் நிறைவடைந்த நிலையிலும் அங்கு போர்க்குற்ற விசாரணைகளை உரிய பொறிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்வது என்பது மிகவும் சவால் மிக்க ஒன்றாகவே அமையப் போகிறது என்று பின்லாந்து நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும் விசாரணைக் குழுவின் அங்கத்தவருமான மார்ட்டி அத்திசாரி தெரிவித்துள்ளார்.

வடக்கில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தவுள்ள விசாரணைக் குழுவை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கடந்த வாரம் அறிவித்தது. பின்லாந்தின் முன்னாள் அதிபர் மார்ட்டி அத்திசாரி, நியூஸிலாந்தின் முன்னாள் கவர்னர் ஜெனரல் சில்வியா கார்ட்ரைட் மற்றும் பாகிஸ்தான் உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் அஸ்மா ஜெஹாங்கிர் ஆகிய மூன்று துறைசார் வல்லுநர்கள் இந்த விசாரணையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மக்களைத் தொடர்புகொள்ள வழிகள் உண்டு.

பாலஸ்தீன நிலப்பரப்பில் இஸ்ரேலிய குடியேற்றங்கள் தொடர்பில் ஐ.நா. விசாரணை அறிக்கையை அஸ்மா ஜெஹாங்கிர் கடந்த ஆண்டு வெளியிட்டார். எந்தவொரு அரசாங்கமும்

19 ஆம் பக்கம் பார்க்க

## விவசாயத் தொகை மதிப்பு நாடு முழுவதும் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் விவசாய தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மதிப்பீட்டு நடவடிக்கையில் விவசாயச் செய்கைகள், கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் பண்படுத்தப்பட்ட நிலங்களின் அளவு என்பன மதிப்பிடப்படவுள்ளன.

இலங்கையிலுள்ள 324 பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் 53 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஆகியவற்றில் இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள்

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே
தரம் 5
மாணவர்களுக்கான
பரீட்சை வினாத்தாள்

# யாழில் 1500 ஹெக்டேயரில் கோடை கால வெங்காயச் செய்கை

## வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் தகவல்

யாழ். மாவட்டத்தில் இம்முறை 1,500 ஹெக்டேயரில் கோடைகால வெங்காயச் செய்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் கிருஷ்ணன் ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

பருவமழை மற்றும் கிணறு, குள்ங்களை நம்பி யூலை மாதம் இச்செய்கையை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வழமையாக. 1,400 ஹெக்டேயரில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருப்பினும், தற்போது வெங்காயத்தின் தேவை அதிகரித்துள்ளதால் 1,500 ஹெக்டேயரில் செய்கை மேற்கொள்ளவுள்ளப்படவுள்ளது.

சிறுப்பிட்டி, உடுவில், கோப்பாய், தெல்லிப்பழை, அச்சுவேலி, புத்தூர், தீவகம் உள்ளிட்ட பல இடங்களில் பெருமளவில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் தற்போதைய சந்தை நிலைவரப் படி வெங்காயம் 130 ரூபா தொடக்கம் 150 வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. இதற்கான காரணம் சந்தையில் வெங்காயத்திற்கு அதிக கேள்வி காணப்படுகின்றமையே ஆகும்.

இந்தக் கேள்வி எதிர்வரும் மாதங்களில் இன்னமும் அதிகரிக்கலாம் என்பதால், கோடை கால வெங்காயச் செய்கையில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வருடாந்த திருவிழாக்கள்

(அச்சுவேலி)

நீர்வேலி செல்லக் கதிர்காம ஆலய வருடாந்த மஹோற்சவமானது இன்று முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 8 ஆம் திகதி கைலாச வாகனத் திருவிழாவும், 9 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத்திருவிழாவும், 10 ஆம் திகதி வியாழக்கிழமை சகோபுர உற்சவமும், 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

❑ ❑ ❑ ❑ ❑

கோப்பாய் வெள்ளெருவை விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 12 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (85)



மல்லாகம் சாளம்மை முருகன் ஆலயத்தின் இராஜ கோபுர கும்பாபிஷேகம் நேற்று மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.



சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி ஆலயத்தின் புதிய சப்பர வெள்ளோட்டம் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்றது

## கல்விக் கண்காட்சி

(வல்வெட்டித்துறை)

வல்லை மகளிர் வித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சி நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வி இ. சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் நடைபெறும். இக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.ம.ஈஸ்வரதேவன் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

## கொடியேற்றம்

(மானிப்பாய்)

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான கொடியேற்ற நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 8 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 9 ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும், 10 ஆம் திகதி மாலை சப்பறத் திருவிழாவும் தொடர்ந்து மறு நாள் 11 ஆம் திகதி வெள்ளிக் கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக்கள் யாவும் சிவப்பிரம்மஸ்ரீ உ.கிருஷ்ணராஜக் குருக்கள் தலைமையில் இடம் பெறும். (92)


### சிறு விளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக்**

**றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

❑ ❑ ❑ ❑

**அறைகள் வாடகைக்கு**

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு மிக அருகில் அறை வாடகைக்கு உண்டு. பல்கலைக் கழக மாணவர்கள் (பெண்கள்) தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 0777708459
R/264


## சட்டவிரோதமான முறையில் மாடு வெட்டியவர் கைது

(அச்சுவேலி)

யாழ். அச்சுவேலி வடக்குப் பகுதியில், சட்டவிரோதமான முறையில் மாடொன்றை இறைச்சியாக்கிய 33 வயதுடைய நபரை நேற்றுக் காலை கைது செய்ததாக அச்சுவேலிப் பொலிஸ் நிலைய குற்ற ஒழிப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி கே.என்.சி.பிரதீப் செனவரத்த தெரிவித்தார்.

தமக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்குச் சென்று குறித்த நபரைக் கைது செய்ததுடன், இறைச்சியினையும் மீட்டதாக அவர் தெரிவித்தார்.

குறித்த நபரினை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## 11 இந்திய மீனவர்கள் நேற்றைய தினம் விடுதலை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 11 பேரும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி இந்திய தமிழகம் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 11 மீனவர்களும் 3 படகுகளில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்ட போதே கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி 11 மீனவர்களையும் நீரியல் வளத்துறையினர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது நீதவான் யூலை 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மேற்படி வழக்கினைஇன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி குறித்த 11 மீனவர்களையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (25)

## தடைப்பட்டது மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதிக்கான மின்விநியோகம் நேற்று முன்தினம் மாலை முதல் தடைப்பட்டிருந்ததன் காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீவுப்பகுதிக்கான மின் விநியோக மார்க்கத்தில் நேற்று முன்தினம் வீசிய பலவந்தக் காற்று காரணமாக மின் கம்பங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாகவே இவ்வாறு தீவுப் பகுதிகளுக்கு மின்தடை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகர் றக்கா வீதி ஊடாக ஊர்காவற்றுறை செல்லும் மின் மார்க்கத்தில் உள்ள மின் கம்பங்கள் கடும் காற்றுக் காரணமாக முறிந்து வீழ்ந்ததின் காரணமாக மின் தடை ஏற்பட்டு இரவு பகலாக அங்கு நடைபெற்ற திருத்த வேலைகளை அடுத்து நேற்றும் காலை மீண்டும் தீவுப்பகுதிகளுக்கு மின்சார சேவை வழமைக்குத் திரும்பியது. (பா)

## தொண்டர் சேவை

(நயினாதீவு)

நயினை நாகபூசனி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா மற்றும் தீர்த்த் திருவிழா நிகழ்வுகளின் போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் . தொண்டர் சேவையையும், அம்புலன்ஸ் சேவையையும் வழங்கவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவ்வச் சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நயினை நாகபூசனி அம்மனின் வருடாந்த கொடியேற்றத் திருவிழா நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே.

இம்முறையும் ஏனைய வருடங்களைப் போன்று பெருமளவு பக்தர்கள் அம்மனைத் தரிசிக்க வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், அடியார்களின் சேமநலன்களைப கவனிப்பதற்காக இலங்கை செஞ்பிறைக் கல்வித் தொண்டர்கள் தயார்ப்படுத்தப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## மாற்றுவலுவுடையோருக்கான சுயதொழில் பயிற்சி நெறி

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரியில் மாற்றுவலுவுடையோருக்கான சுயதொழில் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

தையல், கைத்தொலைபேசி திருத்துதல் பயிற்சி நெறிகளில் பங்கேற்க விரும்பும் மாற்றுதிறனாளிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வருகை தருமாறு தொழில்நுட்பக் கல்லூரியின் தலைவர் ச.மோகனபவன் தெரிவித்தார்.

2014 யூலை பத்தாம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையும் ஆறு மாத காலப் பயிற்சி நெறியைக் கொண்டதாகும்.

பயிற்சி நெறியில் பங்குபெறுவோருக்கு நாளாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 110 ரூபாவும், பயிற்சி நிறைவில் ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களும், அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக பொருத்தமான சுயதொழில் உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி தொழிநுட்பக் கல்லூரியின் 0212285011 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

# இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் பாரம்பரிய கலைகளுக்கு தனிப்பிரிவு

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தகவல்



(திருநெல்வேலி)

பரதநாட்டியம், நாட்டுக்கூத்து, பாரம்பரிய நாடகங்கள் போன்றவற்றை வளர்த்தெடுக்கும் வகையில் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் தனியான பிரிவு ஒன்றை ஆரம்பிப்பதற்கு உத்தேசித்திருப்பதாக யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் நடாத்தப்பட்ட சுதேசிய. பாரம்பரிய நாட்டுக் கூத்து மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் கலைஞர்கள் கலந்து கொண்டு மிகச் சிறந்த நாட்டுக் கூத்துக்களை நிகழ்த்தினர். இவற்றைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த உபவேந்தரை இக் கூத்துக்கள் மிகவும் கவர்ந்து கொண்டதோடு அவற்றின் முக்கியத்துவத்தையும் தெரிந்து கொண்டதினால் அவர் இதனை அறிவித்தார்.

விரைவில் நாட்டுக் கூத்துக்களுக்கான தனிப் பிரிவு ஒன்று யாழ். பல்கலைக்கழக இராமநாதன் அக்கடமியில் அமைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)



மாகாண மட்ட தமிழ்மொழித்தினப் போட்டியில் வடமோடி கூத்துப்பிரிவில் திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளின் "வீரன் தாவீதன்" கூத்து முதலாம் இடம்பெற்றுள்ளது. இதனை ஆசிரியர் ஜோ.ஜோன்சன் ராஜ்குமார் நெறிப்படுத்தியுள்ளார். மாணவர்களுடன் ஆசிரியர் நிற்பதைக் காணலாம். (63)

# நினைவுப்பேருரை

(திருநெல்வேலி)

சைவ வித்தியா விருத்திச்சங் கத்தின்ஸ் தாபகர் இந்துபோர்ட் சு.இராசரத்தினத்தின் 130 ஆவது பிறந்த நாள் விழாவும் நினைவுப்பேருரையும் திருநெல் வேலியில் கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் சங்க ஆராதனை மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தில் சைவ சமயிகள் எதிர்நோக்கும் சவால்கள் என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுபெற்ற விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு நினைவுப் பேருரை நிகழ்த்துவார். பாட்டு, நடனம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (137)

# விடுதியில் தங்கியிருந்த நோயாளர்கள் ஒருநாளில் வெளியேற்றப்பட்டனர்

## பூநகரி வைத்தியசாலையில் சம்பவம்

(முழங்காவில்)

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக ஒருவைத்தியருடன் இயங்கி வந்த பூநகரி அரசினர் வைத்தியசாலையில் கடும் நோயாளர் வைத்தியசாலை விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை முதல் தங்கிச் சிகிச்சை பெற்றுவந்த 10 இற்கும் மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவுக்கு அழைக்கப்பட்டு மருந்து வில்லைகள் கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டதால் நோயாளர்கள் முழுமையாகச் சிகிச்சை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் பற்றி தெரியவருவதாவது,

மேலுமொரு புதிய வைத்தியர் இவ்வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட நிலையில் புதிய வைத்தியர் வந்து மறுநாளே போதிய வளங்கள் இல்லாத நிலையில் சேவை செய்யமுடியாதென்ற காரணத்தைக் கூறி நோயாளர்களை வெளியேற்றியுள்ளதாகவும் அங்கிருந்து வெளியேறி வேறு வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய அவலநிலை உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாக பலபொது அமைப்புக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன. ஒரு வைத்தியருடன் இயங்கும் போது அவரால் நோயாளர் நலன் கருதி உருவாக்கப்பட்ட தங்கியிருந்து சிகிச்சை பெறும் முறை புதிய வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து இந்நிலை ஏற்படக்காரணமென்ன என கேள்வி எழுப்பியுள்ளனர்.

இவ்விடயமாக வட்ட பொது சுகாதாரப் பணிப்பாளரை சந்திக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொது அமைப்பு பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். கடும் நோயாளர் சிகிச்சை பெறுவதற்கு 40 கிலோமீற்றர் தூரத்துக்கு மேல் பிரயாணம் செய்து கிளிநொச்சிக்கோ, யாழ்ப்பாணத்திற்கோ செல்ல வேண்டிய அவலநிலை உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். (112)

# "ஒண்டையும் செய்யிறதுக்கு இந்த அரசாங்கம் விடுகுதில்லை... எங்கட பஜிரோ வாகனங்கள மட்டுந்தான் எடுக்க முடிஞ்சுது..."




'மாகாணசபையை இயக்குகிறதுக்கு மத்திய அரசு விடுகுதில்லை' எண்டு **'எங்கள் தங்கம் சிவசிவா'**விக்கினேஸ்வரன் தொடக்கம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்ரை அழமட்ட ஆதரவாளர்கள் வரை பிலாக்கணம் வைச்சுக்கொண்டிருக்கினம்.

வடக்கு மாகாணசபைக்கு வந்த காசையெல்லாம் அரசாங்கம் முடக்கி வைச்சிருக்கு.

ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவழிக்கிறதுக்கு பிரதம செயலாளர் இடமளிக்கிறா இல்லை.

மாகாணசபை மக்களுக்குச் சேவை செய்யிறதுக்கு சரியான ஒத்துழைப்பை அதிகாரிகள் வழங்குகினம் இல்லை.

மாகாணசபைக்குப் போதிய அதிகாரங்கள் ஒண்டுமில்லை. இந்த நிலையில நாங்கள் என்ன செய்யிறது?

இப்பிடியே மாகாணசபைக்காரர் அரசாங்கத்தைப் புறணி சொல்லிக் கொண்டு தங்கட காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கினம்.

**இப்பிடிப் புறணி சொல்லிறதுக்குத்தான் இவை மாகாணசபைக்குப் போனவையோ...?**

இல்லாட்டிக்கு இப்பிடிப் புறணி சொல்லிறதால ஏதோ மாற்றங்கள் வந்து, மக்களுக்கு நாலு நல்ல காரியங்கள் நடந்திடுமோ?

ஆனால், **இப்பிடிப் புறணி சொல்லிக்கொண்டே தங்களுக்கான சலுகைகள், வசதிகளையெல்லாம் தாராளமாக எடுத்துக்கொண்டும் அனுபவிச்சுக்கொண்டுமிருக்கினம்.**

அதுக்கொரு குறையுமில்லைத் தடையுமில்லை.

ஒவ்வொரு அமைச்சருக்கும் 85 இலட்ச ரூபாய் பெறுமதியான வாகனங்கள் வந்திறங்கப்போகுதாம்...

முதலமைச்சருக்கான வீடு வாடகை மட்டும் மாதமொண்டுக்கு மூண்டு இலட்சமாம்.....

மற்ற அமைச்சர்மாரின்ரை வாடகைக்கணக்கு இன்னும் வெளியால வரேல்ல. அதுகளும் வெளியால வந்தால்தான் மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட காசில எவ்வளவு மிஞ்சப்போகுது...? அதில எத்தினை வீதம் சனத்துக்குக் கிடைக்கப்போகுது எண்டதெல்லாம் தெரியும்.

மாகாணசபையை சரியாக இயங்க வைக்கிறதுக்கு அரசாங்கம் ஒத்துழைக்கவில்லை எண்டால், அதுக்கான வழிகளைக் காணவேணும்.

**'எங்கள் தங்கம் சிவசிவா' படிச்ச மனிசன். கல்விமான். சட்டத்தைக் கரைச்சுக்குடிச்சவர்.**

மாகாணசபையில இருக்கிற மற்ற ஆக்களும் குறைஞ்சவையில்லை.

இவையெல்லாம் சேர்ந்து அரசாங்கத்தை ஒரு பிடி பிடிக்கலாமெல்லோ...

ஒண்டில்நேரில **போய், அரசாங்கத்தோட பேசிறது... ஜனாதிபதியின்ரை கழுத்தில பிடிக்கிறது...**

**இல்லாட்டிக்கு வழக்குப்போடுறது...**

**இல்லாட்டிக்கு இன்ன இன்ன விசயங்களில அரசாங்கம் பாதகமாக நடக்குது எண்டு ஆதாரத்தை வைச்சுச் சனங்களை அணிதிரட்டிப் போராடுறது...**

இதுகளைச் செய்தால் அதில ஒரு ஞாயம் இருக்கு.

**இதுகளையெல்லாம் செய்யாமல் விட்டிட்டு, சும்மா அதுக்கு விடுகிறாங்களில்லை. இதுக்கு விடுகிறாங்களில்லை எண்டு இன்னும் இந்தத் தமிழ்ச்சனங்களைப் பேய்க்காட்டிக் கொண்டிருக்கிறது நல்லதேயில்லை.**

இதுதான் சொந்த இனத்துக்கும் நம்பின மக்களுக்கும் கொள்ளி வைக்கிற காரியம் எண்டு சொல்லிறது.

மாகாணசபையை மக்களுக்காக இயங்க வைக்கிறதை விட்டுப்போட்டு, அதைத் தங்களுக்காகவே இயக்குகிற இந்த விளையாட்டுக் கனகாலத்துக்கில்லை.

தங்கட வசதிகளும் நலன்களும் மட்டும் நல்லாக இருந்தால் காணும் எண்டு நினைக்கிறது மக்களுக்கு எதிரான – சுத்தமான சுயநலமில்லாமல் வேற என்ன?

இல்லையெண்டால், **இந்த மாகாணசபை - மலர்ந்தது தமிழர் அரசு - எண்ட இந்த அரசாங்கத்தினால் இந்த எட்டுமாதத்தில உருப்படியாக என்ன காரியங்கள் நடந்திருக்கு?**

சும்மா ஊர் ஊராகப் படைதிரண்டு போய்... எங்களால 'ஒண்டும் செய்யேலாமக்கிடக்கு... ஒண்டையும் செய்யிறதுக்கு இந்த அரசாங்கம் விடுகுதில்லை...' எண்டு ஒப்பாரி வைச்சுக் கொண்டிருக்கிறதைத் தவிர வேற உருப்படியான காரியம் ஒண்டும் நடக்கேல்ல.

அப்பிடியில்லையெண்டால், மாகாணசபையில நாலு தீர்மானத்தை நிறைவேற்றுவினம். அவ்வளவுதான்.

**ஒரு அரசியல் தலைமை எண்டால் மக்களுக்கு வாற நெருக்கடிகளைத் தன்ரை கெட்டித்தனத்தைப் பயன்படுத்தி அதை வெல்ல வேணும். மக்களுக்கு என்ன தேவைகள் இருக்கு? அதையெல்லாம் எப்பிடி நிறைவேற்றலாம் எண்டு சிந்திச்சுச் செயற்படவேணும்.**

இதுக்குத்தான் அரசியற் தலைமைகள் தேவை. இதையெல்லாம் செய்யிறதுதான் அரசியற் தலைமைகளின்ரை கடமை.

தமிழ்ச்சனங்கள் தாராளமாகத் தங்கட ஆதரவைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குக் குடுத்திருக்கினம். இதை வைச்சு சர்வதேச சமூகத்துக்கு காப்ழறம் எண்டு புலுடாக்கதை விடுகிறதை விட இந்த ஆதரவை வைச்சு தமிழ்ச்சனத்துக்கு – வடக்கு மாகாணத்துக்கு என்ன செய்திருக்கிறியள் எண்டு காட்டுங்கோ...

அதை விட்டுப்போட்டு **இப்பிடி அரசாங்கத்தைக் குற்றம்சாட்டிக்கொண்டு உங்கட அலுவல்களைப் பாக்கிறதை இனியாவது தயவு செய்து கைவிடுங்கோ..**

இந்தக் குணம் இண்டைக்கு நேற்றுத் தமிழர் அரசியல்ல வந்ததில்லை.

இது ஒரு பரம்பரை வியாதி எண்டதும் எங்களுக்குத் தெரியும்.

முந்தியும் இப்பிடித்தான் அரசாங்கத்தைக் குற்றம் சொல்லிச் சொல்லியே ஆயுட்காலப் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவை கனபேர். அவையின்ரை ஆயுளைத் தங்கட கையுக்கை எடுத்தவங்கள் பெடியள் எண்டதை மறந்திடாதேங்கோ....

கோபத்துடன் செயல்படுபவனும், புயலில் கப்பல் விடுபவனும் சரிசமமானவர்கள். - பீச்சர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அழிவுக்குப் பொங்கும் அரசியல்!

அளுத்கம பிரச்சினையையொட்டி முஸ்லிம் தலைவர்களுக்கு தமிழ்த் தலைவர்களும், தமிழ் ஊடகங்களும், தமிழ் ராஜதந்திர(?) விற்பன்னர்களும், ஆய்வாளர்களும், கட்டுரையாளர் பெருந்தகைகளும் வழங்கிவரும் அறிவுரைகளையும், அரசியல் எதிர்வுகூறல்களையும் பார்த்தால் துக்கத்தையும் மீறி தாங்கமுடியாத சிரிப்புத்தான் வெடித்து வருகிறது.

இவ்வளவு கொடுமை நடந்த பிறகும் பதவி, சலுகைகளுக்காக அரசாங்கத்தை விட்டு வெளியேறாமல் இருக்கும் முஸ்லிம் தலைவர்களைக் கண்டித்து எகத்தாளங்களும் கார்ட்டூன்களும் வேறு. சொந்த சமூகம் கஷ்டத்துக்குள்ளாகிய பின்னரும் அரசை எதிர்த்து முஸ்லிம் தலைவர்கள் ஆக்ரோசமாய்க் களமிறங்காமலிருப்பது குறித்த இவர்களது மனிதநேய ஆத்திரத்தை வெளியிடுகிறார்களாம்!

சமூக அக்கறை சார்ந்த புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்தி, கவனமாக நடந்துகொண்டு, நான்கு கொலைகளுடன் பிரச்சினையை மட்டுப்படுத்துவதில் விவேகத்தைக் காட்டியிருக்கும் முஸ்லிம் தலைவர்களைப் பார்த்து, “எங்களைப் போல் நீங்களுமேன் பொங்கியெழுந்து நாற்பதினாயிரம் கொலைகள் பாடழிவுகள் வரைக்கும் இதைக் கொண்டுசெல்லவில்லை?” என்று ஆதங்கப்படுகிறார்களாம்!

சமூகத்தைப் பேரழிவுகளுக்குள் தள்ளும் முட்டாள்தனமான யோசனைகளுடன் செயற்படுபவர்கள் யார் என்று இப்போது புரிகிறதா?

அரசாங்கத்தை உதறிவிட்டு, இந்த மாதனமுத்துப் புத்திசாலிகளான தமிழ்த் தரப்புடன் வந்து அரசாங்கத்துக் கெதிரான நீண்ட நெடும் வீரம் செறிந்த போராட்டத்தில் கைகோர்க்க வேண்டும்; எமது மக்களை மேலும் மேலும் அழிய வைத்து, அதை “உச்சூ” கொட்டிக் கொண்டே உள்நுழைய வரும் சர்வதேசத்திற்குக் காட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்று முஸ்லிம்களுக்கு அறிவுரைக்கிறார்களாம் எங்கள் ‘அதிவிவேகசிகாமணிகள்’!

எழுபத்திஆறில், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்போது இணைந்துநின்று இவர்களுடன் செயற்பட்ட சில மாதங்களுக்குள்ளாகவே, சமூகத்தை அழிவுக்கு அழைத்துச் செல்லும் இந்த வறட்டுத் தேசிய மூளைகளின் சங்கதி பிடிபட்டுத் தனிவழி பார்த்துப் போனவர் முஸ்லிம்களின் தலைவர் அஷ்ரப்.

இந்த முப்பது முப்பத்தைந்து வருடங்களுக்குப் பிறகு சமூக ரீதியாக முன்பிருந்ததை விட முன்னேறிய நிலையிலிருப்பது தமிழர்களா அல்லது முஸ்லிம்களா என்பதை இவர்களும் சிந்திப்பதில்லை; தமிழ் மக்களையும் சிந்தித்துப் பார்க்க விடுவதில்லை.

“அரசுதான் எமது கொடூர எதிரி. நாம் எவ்வளவுதான் அழிந்தாலும், மற்ற சமூகங்களை விட நமது வாழ்மானம் ஐம்பது நூறு வருடங்கள் என்று எவ்வளவு பின்னுக்குப் பின்னுக்குப் போனாலும், எமது மக்கள் தொடர்ந்து பிச்சையேந்தும் வாழ்விலேயே இருப்பினும், எத்தனை வருடங்கள் கழித்தாவது சர்வதேசம் இலங்கை அரசைத் தண்டித்த ‘நல்ல செய்தி’யை மக்களுக்குத் தருவதுதானே நமது அக்கறையும் அரசியல் வாழ்வும்!”...

முஸ்லிம் மக்களினதும் அதன் தலைவர்களினதும் நம்பிக்கையைப் பெற்று, அவர்களோடு சேர்ந்து நின்று சிறுபான்மையினர் உரிமைகளைப் பெறும் வழிக்குச் செல்லவும் துப்பில்லாத இவர்கள், தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக, முஸ்லிம் கட்சிகளிடமும் முட்டாள்தனமான அரச விரோத ஆக்ரோச நாடகங்களை எதிர்பார்க்கிறார்கள்.

இவர்கள் எதையும் சுயநலத்தோடே சிந்திப்பதால் இருட்டறைக்குள் கறுப்புப் பூனையைத் தேடிச் சுவரைத் தடவுகிறவர்களாகவே இருக்கிறார்கள். எதிரியை உணர்ச்சிகரமாகக் கட்டமைத்துக் காட்டி மக்களிடம் பகையாவேசத்தைத் தணிய் விடாமல் பார்ப்பதும், அதன் மூலம் எதைச் சொல்லியும் ஏய்த்துக் கொண்டிருக்கலாம் என்பது தானே இவர்களது ஆயுள்பரியந்த அரசியல்!

கடைந்தெடுத்த இந்தச் சுயநலமே தமிழ்மக்களின் தலைமையாகக் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருப்பதால்தான் நம் பிரச்சினைகளுக்குத் தீர்வை நெருங்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

- ஆசிரியர்

# சமூக ஊடகங்களை முடக்க முயற்சி செய்கிறது அரசு

### - சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டு -

(கொழும்பு)

சமூக ஊடகங்களை முடக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இலங்கையின் சமூக ஊடகங்களின் சுதந்திரத்தை முடக்கும் வகையிலான சட்டங்களை அறிமுகம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

குற்றவியல் சட்டத்தின் விசேட சரத்துக்களில் ஒன்றாக அவசர சட்டமூலமாக சமூக வலையமைப்புக்களை முடக்கும் சட்டமொன்றை அரசாங்கம் கொண்டு வர முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளது. அண்மையில் இடம்பெற்ற பேருவளை, அளுத்கம சம்பவங்கள் போன்ற உண்மை விடயங்களை மக்கள் சமூக வலையமைப்புக்களின் ஊடாகவே அறிந்து கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளது.

இன,மத வன்முறைகளையும் குரோத உணர்வுகளையும் தூண்டும் சமூக வலையமைப்பு மற்றும் இணைய செயற்பாடுகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.மக்கள் சமூக வலையமைப்புக்களின் ஊடாக தகவல்களை பெற்றுக் கொள்ளும் வழிகளை முடக்கும் நோக்கிலேயே இந்த முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டம், ஒழுங்குப் பிரிவு தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

குரோத உணர்வு எதுவென்பதனை வரையறுக்காது தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவினால் கொண்டு வரப்பட உள்ள குரோத உணர்வினைத் தூண்டும் பேச்சுக்கு எதிரான சட்டமும் பயனற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குரோத உணர்வைத் தூண்டும் வகையிலான நடவடிக்கைகளை மட்டுமே அரசாங்கம் முடக்க வேண்டும் எனவும், மாற்றுக் கருத்துக்களை முன்வைப்போரை முடக்க அரசாங்கம் முயற்சிக்கக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர் அளுத்கம பிரதேசத்தில் ஆற்றிய உரை பற்றிய தகவல்கள் யூடியுப்பில் மட்டுமே வெளியிடப்பட்டிருந்தது, அச்சு, இலத்திரனியல் ஊடகங்களில் குறிப்பிடப்படவில்லை என அவர தெரிவித்துள்ளார். இவ்வாறான சமூக ஊடக வலையமைப்புக்களின் ஊடாக மக்கள் எது சரி எது பிழை என்பதனை உணர்ந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

இந்தியாவின் புகழ்மிக்க பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக 8 இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 2014 - 2015 ஆம் ஆண்டுக்கான ஆயுர்வேதம், யுனானி, சித்த வைத்தியம், ஹோமியோபதி, மற்றும் யோகா ஆகிய பாடநெறிகளுக்கே புலமைப்பரிசில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கை உயர்கல்வி அமைச்சின் ஆலோசனைப்படி தெரிவு செய்யப்படவுள்ள மாணவர்களுக்கு கல்வி, சுகாதாரம், தங்குமிட வசதிகளுக்கான உதவித்தொகை இந்திய அரசினால் வழங்கப்படும்.

இக்கற்கை நெறிகளைப் பயில விரும்பும் மாணவர்கள் தமது சுயவிபரக்கோவையினை எதிர்வரும் யூலை 8 ஆம் திகதிக்கு முன்னர் உயர் கல்வி அமைச்சு, 18, வாட் ப்ளேஸ், கொழும்பு - 07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் உயர்கல்வி அமைச்சின் இணையத்தளமான www.mohe.gov.lk என்ற முகவரியிலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். மேலதிக தகவல்களுக்கு ஆர்வமுள்ளவர்கள் www.indian medicine.nic.in இவ் இணையத்தளத்தினையும் பார்வையிட முடியும்.

## விவசாய உற்பத்தியின் ஏற்றுமதியில் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில், விவசாய உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாயில் கால் பங்கு விவசாய உற்பத்தி ஏற்றுமதி மூலம் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில், 258 கோடியே 10 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான விவசாய உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக 2013ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தியின் மூலம் 154 கோடியே 20 இலட்சம் அமெரிக்க டொலர்கள் வருவாயாக கிடைத்துள்ளன.

இது தவிர, வாசனைத் திரவியங்கள், மரக்கறி வகைகள், பதப்படுத்தாத புகையிலை வகைகள், உட்பட்ட ஏனைய விவசாய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியும் இந்தக் கால கட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பஸ் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படாது

### போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை பஸ் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பஸ் கட்டணத் திருத்தம் தொடர்பான தேசிய கொள்கைக்கு அமைவாக வருடாந்தம் யூலை மாதம் முதலாம் திகதி பஸ் கட்டணங்கள் திருத்தப்படுகின்றன.

எவ்வாறாயினும் பஸ் கட்டண அதிகரிப்பிற்கான தேவை தற்போது ஏற்படவில்லை என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரேனுக்க துஷ்யந்த பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

பஸ் கட்டணத் திருத்தம் தொடர்பில் பஸ் சங்கங்கள் மத்தியிலும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

ஒரு சில பஸ் உரிமையாளர் சங்கங்கள் யூலை மாதம் முதலாம் திகதி பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளன.

பஸ் கட்டணங்கள் கட்டாயமாக அதிகரிக்கப்படவேண்டும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

செலவீனங்களில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பினால் பஸ் உரிமையாளர்கள் தொழில் ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாக சங்கத்தின் பிரதம செயலாளர் அஞ்ஜன பிரியஞ்ஜித் கூறியுள்ளார்.

தென்மாகாண பஸ் உரிமையாளர்களின் சங்கமும் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் இம்முறை மாறுபட்ட நிலைப்பாட்டில் உள்ளது.

இம்முறை பஸ் கட்டண அதிகரிப்பு இடம்பெறாது என அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

பஸ் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க உறுதிப்படுத்தியுள்ளார். பஸ் கட்டண திருத்தம் தொடர்பான கொள்கைக்கு அமைய கட்டண அதிகரிப்புக்கான தேவை இம்முறை ஏற்படவில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வியாபார ஒழுக்கம்



**போருக்குப்** பின்னரான எமது யாழ்ப்பாண சமூகத்தில், வணிக நடவடிக்கைகள் தமக்கே உரிய தனித்துவ தன்மைகளில் இருந்து விலகி பிறழ்வான நடத்தைகளையே நுகர்வோர் சார்பாகவும் தனது தொழிலாளர்கள் சார்பாகவும் பிரயோகித்து வருகின்றமை தெரிகிறது. தொழில் தர்மங்கள் பேணப்படுவதில்லை; சுயலாபத்தை மட்டும் கருத்தில்கொண்டே அனைத்து முதலாளிகளும் சரி, நிறுவனங்களும் சரி செயற்படுகின்றன.

இதனால் இவர்களை சார்ந்துள்ளவர்கள் எத்தகைய பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்பது கருத்தில் எடுக்கப்படுவதில்லை. இத்தகு பாதிப்புக்களில் இருந்து பாதிக்கப்படுபவர்களை பாதுகாக்க வேண்டியது கற்ற சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரினதும் கடமை. இதனால் வியாபார ஒழுக்கம் தொடர்பாக அறிந்திருக்க வேண்டியது அனைவரின்தும் கடமை ஆகும்.

**வியாபார ஒழுக்கம் என்றால் என்ன?**

உற்பத்தி மற்றும் வணிக நடவடிக்கைகள் தொடர்பாக நல்ல செயற்பாடுகளை ஊக்குவிப்பதும் தவறான செயற்பாடுகளை விலக்கிக் கொள்வதுமான செயற்பாடே வியாபார ஒழுக்கம். உரிமையாளர் மற்றும் நுகர்வோரின் நடத்தைகள் தொடர்பாக பல கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றில் வியாபார தளத்தில் எது சரி? எது பிழை? பின்பற்றப்பட வேண்டியவை? பின்பற்றக்கூடாதவை பற்றி வியாபார ஒழுக்கம் கூறுகின்றது. இவற்றை "ஒழுக்கக் கடமைகள்" என்று கூட அழைக்கலாம். இவையே ஒரு நிறுவனம் வெற்றியை நோக்கி செயற்பட அடித்தளமாக அமைகின்றன. ஆனால் வியாபார ஒழுக்கத்தில் கூறப்படும் கடமைகள் அனைத்தும் சமூகத்திற்கு நன்மை பயப்பதாக அமைய வேண்டும்.

இந்த வியாபார ஒழுக்கமானது துறை ரீதியாக வகைப்படுகின்றது.

**உற்பத்தித்துறை தொடர்பான ஒழுக்கங்கள் -** ஒரு நிறுவனம் உற்பத்திப் பொருட்கள் சேவைகளை சமூகத்திற்கு வழங்கும்போது தரமான மூலப்பொருட்களைக் கொண்டு தரமான உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் தரமான முறையில் பொதியிடவும் வேண்டும் எனக் கூறுகின்றது.

**நிதி கணக்கீட்டு துறை ஒழுக்கங்கள் -** நிதிக்கொடுக்கல் வாங்கல்கள் முறையாக பதிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் உண்மைத் தன்மையான செலவுகளையும் உள்ளடக்கி இருக்க வேண்டும்.

**விவேக சொத்துக்கள் தொடர்பான ஒழுக்கங்கள் -** புதிய படைப்புக்கள் புதிய ஆக்கங்கள் மேற்கொள்ளும்போது ஆக்க உரிமையாளரின் அனுமதி இன்றி அதனைப் பயன்படுத்துதல் குற்றம் என கூறுகின்றது.

**மனிதவள முகாமை ஒழுக்கங்கள் -** பணிபுரியும் ஆண், பெண் ஊழியர்கள் சமமாக மதிக்கப்பட வேண்டும் எனவும் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் தொழிலாளருக்கு உரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். மேலும் முறையான வகையில், பாகுபாடின்றி ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடல் என்பது பற்றியும் கூறுகின்றது.

**சந்தைப்படுத்தல் தொடர்பான ஒழுக்கங்கள் -** சந்தைப்படுத்தல் செயற்பாடுகளில் காணப்படும் முறையீனங்கள், தவறான நடத்தைகள், தவறான விற்பனை மேம்படுத்தல்கள், விளம்பர செயற்பாடுகள், நிறுவனத்தினதும் நுகர்வோரினதும் நன்மதிப்பு பாதிப்படையாத வகையில் செய்பட வேண்டும் எனக் கூறுகின்றது.

சந்தைப்படுத்தல் தொடர்பான ஒழுக்க நெறிகளை சிறப்பான முறையில் நிறுவனங்கள் பின்பற்ற ஐக்கிய நாடுகள் நிறுவனம் தன் ஒழுக்கக்குறியீடுகளாக பின்வருவனவற்றை கூறுகின்றது.

• நிறுவனத்தில் பணிபுரியும் எல்லா ஊழியர்களும் வகைக்கூறுதல் வேண்டும்.

• வழங்கப்படும் பொருட்கள் சேவைகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் நேர்மையானவையாகவும், தவறுகள் இல்லாதவையாகவும் இருக்க வேண்டும்

• பொருட்கள் சேவைகளை நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது அவற்றின் தரம், விலை என்பவற்றை அறிந்து கொள்வனவு செய்ய சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்.

• அனைத்து ஊழியர்களும் தமது கருமங்களில் உயர்ந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதை உறுதி செய்தல் வேண்டும்.

வியாபார நிறுவனங்கள் இலாபம் உழைக்கின்றபோது அவை நியாயமான முறையில் பகிரப்பட வேண்டும். தனது போட்டி நிறுவனங்களின் வியாபார இரகசியங்களை களவெடுத்தல், ஒற்றர்கள் மூலம் இரகசிய தகவல்களை எடுத்தல், ஊழியர்களுக்கு இலஞ்கம் கொடுத்தல், தொலைபேசி உரையாடல்களை இரகசியமாகக் கேட்டல் ஆகியன தவிர்க்கப்பட வேண்டும் என வியாபார ஒழுக்க நெறிகளில் கூறப்படுகிறது.

வணிக நிறுவனங்கள் பொருட்கள் சேவைகள் தொடர்பில் உண்மையான தகவல்களை மட்டுமே வழங்க வேண்டும். பொய்யான தகவல்களை வழங்கி வாடிக்கையாளர்களை இழப்புக்கு உட்படுத்தல் கூடாது.

உயர்மட்ட முகாமையாளர்கள் இலாபங்களை அனைத்து ஊழியர்களுக்கும் பங்கீடு செய்தல் அவசியம்; தனிப்பட்ட தேவைக்கு மட்டும் பயன்படுத்தக்கூடாது எனவும் கூறப்படுகின்றது.

**நுகர்வோர் சார்பான ஒழுக்க விழுமியங்கள்:**

ஒரு வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் - முதலாளியாக இருந்தால் என்ன? ஊழியராக இருந்தால் என்ன? - அனைவரும் நுகர்வோருக்கு விசுவாசமாகவும் அவர்களை மதித்தும் நடக்க வேண்டும். விளம்பரங்கள் ஊடாக எத்தகைய கொள்கைகளை முன்வைக்கிறார்களோ அவற்றை பொய்யின்றி பின்பற்ற வேண்டும்.

மேலும், பழுதான மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்யக்கூடாது. பொருளின் மீது பொறிக்கப்பட்ட விலையிலேயே விற்பனை செய்ய வேண்டும். தட்டுப்பாடான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பொருட்களை முடக்கி வைத்தலோ அல்லது விலைகூட்டி விற்றலோ கூடாது.

**தொழிலாளர்கள் சார்பாக இருக்க வேண்டிய ஒழுக்க விழுமியங்கள்:**

தொழிலாளியின் செயற்பாடுகள் அந் நிறுவனத்திற்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். தனிப்பட்ட விதத்தில் நன்மையை எதிர்பார்க்காமல் வேலைகளை மேற்கொள்ள வேண்டும். நேர்மையுடனும் வினைத்திறனுடனும் செயலாற்ற வேண்டும்.

நிறுவனங்களில் இருந்து தொழிலாளர்கள் எவ்வித பொருட்களையும் அதாவது பழுதடைந்த பொருட்களையோ, மிகுதியான பொருட்களையோ வீட்டுக்குக் கொண்டு செல்லக்கூடாது.

**சமூகத்தின் சார்பாக கொண்டிருக்க வேண்டிய ஒழுக்க விழுமியங்கள்:**

நிறுவனத்தின் எந்தவொரு செயற்பாடாக இருந்தாலும் சரி, அது சமூக நன்மையை நோக்கியதாக அமைய வேண்டும். இத்தகைய சமூக நன்மையின் அடிப்படையிலேயே நிறுவனம் தனிப்பட்ட நன்மையை அனுபவிக்க முடியும். இதன்மூலமே சமூகத்தின் தேவையும் நிறைவு செய்யப்படும்.

நிறுவனத்தின் முழுமையான இலக்கும் இலாபத்தை நோக்கியதாக மட்டுமே இருக்கக்கூடாது. மாறாக, சேவையினூடாகவே இலாபத்தை உழைக்க வேண்டும்

எந்தவொரு வியாபார நடவடிக்கையாக இருந்தாலும் நுகர்வோர், தொழிலாளர், சமூகம் சார்பாக சிறந்த ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிக்கும்போதே அங்கு சிறந்த வணிகச் சூழலை ஏற்படுத்த முடியும்.

**இன்று வியாபார ஒழுக்கம் கடைப்பிடிக்கப்படுகின்றதா?**

இன்றைய காலத்தில் இலாபநோக்கமும் சுயநல நோக்கமுமே மனிதனிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது. இத்தகைய சுயநலப்போக்கு ஒரு வியாபாரியிடம் மேலோங்கினால் அச்சந்தர்ப்பத்தில் வியாபாரத்திற்குரிய தனித்துவம் குன்றிவிடும்.

ஆரம்பகாலத்தில் விவசாயம் எவ்வகையில் தனித்துவம் கொண்ட தொழிலாக இருந்தாலோ இன்று வியாபாரம் அதற்கு இணையாக வைத்து நோக்கப்படுகின்றது. இவ்வியாபாரம் மனிதவர்க்கத்தின் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் தொழிலாகக் காணப்படுகின்றது. இதனால் இத்தொழில் மனிதாபிமானமொன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட வேண்டும். ஆனால் இன்று மனித தர்மத்திற்கு மாறாக மனித வாழ்க்கையே வியாபாரத்துடன் ஒப்பு நோக்கப்படுகின்றது. இதனால் வியாபாரம் இழிநிலை நோக்கிச் சென்று விடுகின்றது.

ஒரு வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர் மனிதப்பண்புகள் நிறைந்தவராகவும் நீதிநெறி நின்று செயற்படுபவராகவும், சுயநலம் இலாபநோக்கம் இல்லாதவராகவும் இருக்க வேண்டும். வியாபாரத்துடன் எப்போதும் மனித தர்மம் இணைய வேண்டும். அப்போதே தனிநபரும் சமூகமும் நன்மை அடைவர்.

புராதன காலத்தில் பண்டங்களுக்கு பதில் பண்டங்களே பரிமாறப்பட்டன. இலாபம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கம் குறைவாகக் காணப்பட்டது. மனிதப்பண்புகள் பேணப்பட்டன. ஆனால் காலப்போக்கில் நாகரீக வளர்ச்சியின் காரணமாக மனிதனின் தேவைகளும் விருப்பங்களும் பல்கிப் பெருகின. இதனால் வியாபாரமானது விற்பனை, கொள்வனவு ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதாக தோன்றியது.

பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் இலாபம் உழைத்தலே இதன் பிரதான நோக்கம். வியாபாரம் இலாபத்தை நோக்காக கொண்டிருப்பதை தவறு எனக் கூற முடியாது. அது வியாபாரியின் தனிப்பட்ட விருப்பம். ஆனால் தேடிய இலாபம் தகாதமுறையில் பெறப்பட்டதாக இருக்கக்கூடாது.

இன்று ஒவ்வொரு நாட்டினதும் முதுகெலும்பாக இருப்பது வணிகம். இதனை ஆதாரமாகக் கொண்டே நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பன மதிப்பிடப்படுகின்றது. இத்தகு தன்மையை கொண்டிருப்பதால் ஒவ்வொரு வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோரும், நுகர்வோர், தொழிலாளர், சமூகம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு அவர்கள் சார்பாக ஒழுக்க விழுமியங்களை பிரயோகித்து தமது நலனையும் சமூக நலனையும் விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

**யாழ் சமூகத்தில் வியாபார ஒழுக்கம் பேணப்படுகின்றதா?**

யுத்தத்திற்குப் பின் வெளியில் இருந்து பொருட்கள் சேவைகள் அதிகளவில் உள்வருவதால் உள்ளூர் உற்பத்திகள் பாதிக்கப்படுகின்றன. வேலை வாய்ப்புகளும் குறைவடைகிறது.

தொழிலாளர்கள் சார்பாக பல நலத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்தாலும் கூட, அவற்றை உரிமையாளர்கள் செயற்படுத்துகின்றார்களா? என்பது சிந்திக்க வேண்டிய விடயம். இன்றைய யாழ்ப்பாண சமூகத்தை பொறுத்தவரை சீட்டு, லஞ்சம், காசோலை மோசடி, கடன் என்பன மலிந்து காணப்படுகின்றன. இவற்றால் பலர், மன உளைச்சலுக்கு ஆளாகி தற்கொலை வரை செல்கிறார்கள்.

லீசிங் கம்பனிகளும் காப்புறுதிக் கம்பனிகளும் மக்களிடம் இருந்து பெருந்தொகைப் பணத்தை பெற்று இயங்கி வருகின்றன. ஆனால் இயங்க முடியாத சந்தர்ப்பத்தில் செயற்பாடுகளை இடைநிறுத்திவிட்டு தம் சொந்த இடங்களுக்குச் சென்று விடுகின்றன. இந் நிறுவனங்களின் ஆசை வார்த்தைகளால் மயங்குவது படிக்காத பாமரர்களும், ஏழைகளுமே.

இவற்றைக் கொண்டு நோக்கும்போது யாழ் சமூகம் வியாபார ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதில் அதிக அக்கறை கொள்ளவில்லை என்பது தெரிகிறது.

**வியாபார விழுமியங்களை கடைப்பிடிக்கும் முறைகள்?**

எப்போதும் வியாபார நிறுவனங்கள் நுகர்வு மற்றும் பாவனைக்கு ஏற்றதும், தரமானதும் ஆன பொருட்களையே நியாய விலைக்கு வழங்க வேண்டும். தற்காலிக தட்டுப்பாடுகளை ஏற்படுத்தி பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய முயலக்கூடாது. கலப்பட உற்பத்திகள், பழுதடைந்த பொருட்களை விற்பனை செய்யக்கூடாது. கள்ளக்கடத்தல், பதுக்கல் போன்ற நடவடிக்கைகள் தடை செய்யப்பட வேண்டும்.

அரசாங்கம் விதிக்கும் வரிப்பணத்தை முறைப்படி செலுத்த வேண்டும். கள்ளக் கணக்குகள் காட்டுவதை தவிர்க்க வேண்டும். கறுப்புப் பணம், கறுப்புச் சந்தை என்பன முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.

பொருட்களை அதிக விலைக்கு விற்கும்போது, விற்பனை செய்வோர் நன்மையடைவர். ஆனால், நுகர்வோர் சுரண்டப்படுவர். மாறாக, மிகக்குறைவான விலையில் விற்பனை செய்தால் நுகர்வோர் நன்மை அடைவர். ஆனால் வியாபாரிகள் பாதிப்படைவர். இவர்கள் இருவர் பாதிக்கப்படுவதையும் தடுக்கும் நோக்குடன் இலாபமானது இருசாராரிடமும் பகிரப்படும் விதத்தில் விற்பனை நடவடிக்கை இடம்பெற வேண்டும்.

சட்டங்களை மதித்தும், அனுசரித்தும் செல்ல வேண்டும். வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவரிடம் எப்போதும் தான் ஒரு சமூகத் தொண்டு செய்கின்றேன் என்ற எண்ணம் மேலோங்க வேண்டும்.

மக்களின் தேவைகள் விருப்பங்களை கண்டறிந்து உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும். இதில் ஈடுபடுவோர் இலாப நோக்கு, சுயநலப்போக்கு என்பவற்றைக் குறைத்து பொதுநலம், சேவை, மனிதநேயம். நேர்மை, சமூக நலன் ஆகியவற்றை அனுசரித்து செயற்பட வேண்டும்.

எப்போதும் நுகர்வோர் தொழிலாளர் சமூகம் சார்பான விழுமியங்கள் சிறப்பாக பேணப்பட வேண்டும். "தீவினை விட்டு ஈட்டல் பொருள் தரும்" என்ற ஆன்றோர் கூற்றுக் கிணங்க அரச நீதி, தெய்வ நீதி, சமூக நீதி என்பவற்றை புறக்கணித்து வணிக நடவடிக்கையில் ஈடுபட்டால் அது துன்பத்தை தரும் என்பதை கருத்திற்கொண்டு, நீதியாக செயற்படும்போது, அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள் என்பதில் ஐயம் இல்லை.

**A.X.V. சிந்துஜா**
மெய்யியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# ஜனாதிபதியை பதவி கவிழ்க்க முயற்சி செய்கிறது நோர்வே

## செஹான் சேமசிங்க எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியை பதவி கவிழ்க்க நோர்வே முயற்சித்து வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் பகுதியில் அண்மையில் நடைபெற்ற மக்கள சந்திப்பொன்றில் பங்கேற்ற போது அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் அரசாட்சிப் பொறுப்பிலிருந்து ஜனாதிபதியை பதவி விலக்குவதே நோர்வேயின் நோக்கமாக அமைந்துள்ளது.

எனினும், இந்த நோக்கத்திற்கு மக்கள் ஆதரவு வழங்க மாட்டார்கள்.

நாட்டில் பல்வேறு மத மற்றும் இனத் தரப்புக்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் முயற்சியில் நோர்வே ஈடுபட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு முதல் மக்கள் ஜனாதிபதியுடன் இருக்கின்றார்கள். நாடாளுமன்றை பிரதிநிதித்துவம் செய்யும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 161 பேர் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கின்றனர்.

ஜனாதிபதி கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

நாட்டின் அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலையை ஜனாதிபதியே ஏற்படுத்தினார் என நாடாளுமன்ற உறுப்பினர் சேமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# சைபர் குற்றச் செயல்கள் இலங்கையில் அதிகரிப்பு




இலங்கையில் சைபர் குற்றச் செயல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கணனி அவசர தயார்ப் பிரிவு இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் 900 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத தெரிவித்துள்ளது.கடந்த ஆண்டு முழுவதிலுமே மொத்தமாக 1200 முறைப்பாடுகள மட்டுமே பதிவாகியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

அண்மைக் காலமாக இணையக் குற்றச்செயல்கள், சைபர் குற்றச் செயல்கள் வெகுவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சமூக வலையமைப்பு மற்றும் மின்னஞ்சல் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.காதல் விவகாரங்களினால் ஏற்படும் முரண்பாடுகளே அதிகளவில் இணையக குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கான ஏதுவாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காதல் உறவில் ஏற்படும் விரிசல் காரணமாக காதலர், அந்தரங்க விடயங்களை இணையத்தில் பிரசாரம் செய்யும் கலாசாரம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

# ஜனாதிபதியை கொலை செய்து ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி

## எதிர்க்கட்சிகளை சாடுகிறார் ஜோன்ஸ்டன்



ஜனாதிபதியை கொலை செய்தேனும் ஆட்சியை கைப்பற்றிக் கொள்ள எதிர்க்கட்சிகள் முயற்சித்து வருவதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நிக்கவரட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற அடிக்கல் நாட்டும் வைபவமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சர் வெளிநாடுகளிடம் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றார். இதனால் பொதுபல சேனா அமைப்பு ஜனாதிபதியை திட்டுகின்றது.

பொதுபல சேனா அமைப்பின் நடவடிக்கைகளினால் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியை திட்டுகின்றார். ஜனாதிபதி இரண்டு தரப்பினரிடமும் திட்டு வாங்க நேரிட்டுள்ளது.

எனினும் நாடு என்ற ரீதியில் மக்களுக்கு எது நன்மைகளை ஏற்படுத்துமோ அதனை ஜனாதிபதி செய்கின்றார்.

ஜனாதிபதியின் சிறந்த தலைமைத்துவம் காரணமாக எதிர்க்கட்சிகள் அச்சமடைந்துள்ளன.

அரேபிய நாடுகளைப் போன்று இலங்கையிலும் குழப்பங்களை விளைவிக்க சிலர் முயற்சிகின்றனர். கஷ்ரப்பட்டு ஈட்டப்பட்ட சமா தானத்தை எவருக்கும் தாரை வார்த்துக் கொடுக்க முடியாது.

ஜனாதிபதி நாட்டின் எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்கும் நோக்கில் செயற் பட்டு வருவதாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச, இராணுவ இரகசியங்களை எம்.பிக்கள் வெளியிடக் கூடாது

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

அரசினதும், இராணுவத்தினதும் புலனாய்வு தகவல்களை உணர்ச்சிபூர்வமான புலனாய்வு விடயங்களையும் வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்து நடாளுமன்ற உறுப்பினர்களையும் பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின ஊடக நிலையப் பணிப்பாளரும், பாதுகாப்பு பேச்சாளருமான பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளதாவது,

சமூக வலைத் தளங்களின் ஊடாக ( Facebook,twitter) இன, மத வெறுப்புணர்வுகளை வளர்க்கும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி இன, மத வன்முறைகளை மேற்கொள்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பாதுகாப்புச் செயலர் சட்டம், ஒழுங்கு அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஒரு எதிர்க்கட்சி எம். பி யின் இரகசியமான முயற்சி பற்றி பொதும்க்களுக்கு நாம் தெரியப்படுத்தினோம். மிகவும் கஷ்ரப்பட்டு பெற்ற சமாதானத்துக்கும் தேசிய பாதுகாப்புக்கும் இது அச்சுறுத்தலாக அமையும் முழு நாட்டின் பாதுகாப்பின் மீதே இது செய்யப்பட்டது. இலங்கை இராணுவம் சார்பில் இது செய்யப்படவில்லை.

சம்பந்தப்பட்ட தரப்பினரால் இவ் விடயமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடர்பாக தெரிவித்ததன் பின்னரே இவ்வாறு எம். பி. மார்களிடம் புலனாய்வுத் தகவல்களை வெளியிடுவதை தவிர்த்துகொள்ளுமாறு கேட்டோம் என்றும் பிரிகேடியர் மேலும் தெரிவித்தார்.

# ஜானக பெரேரா கொலை பலவந்தமாக வாக்கு மூலம்

## சந்தேகநபர் நீதிமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)



பொலிஸார் பலவந்தமாக வாக்குமூலங்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டதாக மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் அப்துல் அமீட் உமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அனுராதபுரம் நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடமத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்டவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கும் எனக்கும் தொடர்பில்லை. குண்டுத்தாகுதல் நடத்தப்பட்ட காலத்தில் நான் அனுராதபுரத்தில் இருக்கவே இல்லை.

இது போலியான குற்றச்சாட்டுச் சம்பவம் இடம்பெற்று சில வாரங்களின் பின்னர் களுபோவில பிரதேசத்தில் வைத்து என்னைக் கைது செய்தனர். கைது செய்தவர்கள் பொலிஸ் சீருடையில் இருக்கவில்லை. பின்னர் வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்று ஒன்பது நாட்கள் தடுத்து வைத்திருந்தனர். தடுத்து வைத்து என்னைக் கடுமையாகத் தாக்கினர். பணம் கொடுத்தால் விடுதலை செய்வதாகத் தெரிவித்தனர்.

பெருமளவு பணம் வழங்குமாறு அவர்கள் என்னிடம் கோரினார்கள். ஆரம்பத்தில் இவர்களை ஓர் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கருதினேன். பணம் இல்லையென்று சொன்னேன். அப்படியென்றால் சிறைக்குச் செல்ல நேரிடும் என அவர்கள் எச்சரித்தனர் எனச் சந்தேக நபர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு என்றால் குறித்த காலப்பகுதியில் வங்கிக் கணக்கிற்கு எவ்வாறு பாரியளவில் பணம் கிடைத்தது என சட்டத்தரணி கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் போது, வாசனைத் திரவிய வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாகவும், இதன் மூலம் பாரியளவு பணம் தமது வங்கிக் கணக்கிற்கு கிடைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சந்தேக நபரை பொலிஸார் தாக்கவில்லை பலவந்தமாக கையொப்பம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என எதிர்த்தரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இதேவேளை சந்தேக நபரை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 1ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# பணியில் மாற்றம்

களுத்துறையில் ஐந்து புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த ஐந்து புலனாய்வு உத்தியோகத்தர்களும், புலனாய்வுப் பணிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு சாதாரண பொலிஸ் கடமைகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன.களுத்துறை பிராந்தியத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் எஸ். இந்திரன் இந்த உத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

களுத்துறை பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் உள்ளிட்ட ஐந்து உத்தியோகத்தர்கள் இவ்வாறு புலனாய்வுப் பிரிவிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அளுத்கம, மத்துகம, மிகத்தென, தினியாவல மற்றும் தெபுவன ஆகிய பொலிஸ் நிலையங்களின் புலனாய்வுப் பிரிவுகளுக்காக புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# இனவாதம் பேசும் பிக்குகளை தண்டிக்க வேண்டும் தேரர்கள்

## அமைச்சர் திஸ்ஸவிதாரண கோரிக்கை



(கொழும்பு)

நாட்டுக்குள் இனவாதம் மற்றும் மதவாதத்தை தூண்டிவிடும் பிக்குகளுக்கு எதிராக அந்தந்த பிரிவுகளில் உள்ள மகாநாயக்க தேரர்கள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிரேஸ்ட அமைச்சர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நடந்து கொள்ளும் பிக்குகள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என இடதுசாரி கட்சிகளின் ஒன்றியம் சார்பில் ஜனாதிபதிக்கு கோரிக்கை முன் வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முக்கியஸ்தர்களுடன் அண்மையில் நடாத்திய கலந்துரையாடலின் போது இதுகுறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

30 வருட கால யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் அவ்வாறானதொரு நிலைமையை எதிர்கொள்ளத் தயாரில்லை எனவும் இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படாதிருக்க அனைத்து இலங்கையர்களும் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



கைதடி மேற்கு உதயநகர் அருள்மிகு அண்ணமார் ஆலயத்தின் அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் அடியார்கள் பால்செம்பு எடுப்பதையும் சுவாமி உள்வீதி வலம் வருவதையும் அடியார் ஒருவர் தீ மிதிப்பதனையும் காணலாம். (51, 90)

# இரு அங்கத்தவர்களையுடைய குடும்பங்களுக்கும் வீட்டுத்திட்டம் வழங்க நடடிக்கை எடுக்கப்படும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கடந்த யுத்த அனர்த்தங்களினால் வீடுகளை இழந்து பல குடும்பங்கள் பல்வேறு கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றன. இந்நிலையில் இவ்வாறு கஷ்டங்களை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கும் வீட்டுத் திட்டத்தை வழங்க நடவடிக்கை எடுத்துவருவதாக ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கரியாலைநாகபடுவான் கிழக்கில பொதுநோக்கு மண்டபத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

பூநகரி பிரதேச சபைக்குரிய பல வேலைத்திட்டங்களை நாம் அரசாங்கத்தின் நிதியுதவியைப் பெற்றுக் கொடுத்து செயற்படுத்தி வருகின்றோம். அதனூடாக மயானங்கள், நூலகங்கள், வீதிகள், சந்தைகள், பூங்காக்கள் உள்ளிட்ட பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீட்டுத்திட்டங்களை வழங்கும தொண்டு நிறுவனங்கள் கையாளுகின்ற பயனாளிகள் தெரிவு தொடர்பான வரையறைக்குள் அடங்காதவர்களுக்கு வீடுகள் வழங்கப்படமாட்டாது.



இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவிற்காக வழங்கப்படும் புள்ளியிடல் நடைமுறைக்கமைவாக உடல் ரீதியான பாதிப்புக்களை எதிர்கொண்ட குடும்பத் தலைவர்களைக் கொண்ட இரு அங்கத்தவர்களை உள்ளடக்கிய குடும்பங்கள் சிலவற்றுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளமை வரவேற்புக்குரியது. இருப்பினும் வீடுகளைப் பெறமுடியாதுள்ளவர்களின் ஆதங்கங்களை நாம் புரிந்துகொள்கின்றோம். அவர்களுக்கும் வீட்டுத்திட்டங்களை வழங்குவதற்கு நாம் அதி உச்ச முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் வீட்டுத்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிக்குள் முடிவுக்கு வரும் அந்தக் காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் 28,000 இற்கும் அதிகமானவர்களுக்கு வீட்டுத்திட்டங்கள் கிடைத்துவிடும். இருப்பினும் அதற்கிடையில் இரண்டு அங்கத்தவர்களுக்கும் குறைந்தவர்களைக்கொண்ட குடும்பங்களுக்கும் வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்பதே எமது நோக்கு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் புவிதரனின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலன், பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் காசிம், கிராமசேவையாளர் நாகலிங்கம், ஈ.பி.டி.பி.யின் பூநகரி பிரதேச அமைப்பாளர் நிர்மல றொபின்சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேலணை சரஸ்வதி வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் என்.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு பழைய மாணவர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மனோன்மணி அம்பாளுக்கு வருடாந்த மஹோற்சவம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம், கல்வியங்காடு திருவருள்மிகு இலங்கை யகி மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிரவரும் 16 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறவுள்ளன.

25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை மஞ்சத் திருவிழாவும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வேட்டைத்திருவிழாவும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் 30 ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று 31 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை அம்பாள் தெருவீதி உலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (137)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(கிளிநொச்சி)

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி, ஹோமகம கல்வி வலயங்களில் உள்ள 40 பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான அன்பின் கல்விக் கூடம் என்னும் செயலமர்வு இன்று தொடககம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மீகொட ஆசிரியர் வளநிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இச் செயலமர்வில் இலங்கையில் காணப்படுகின்ற இன சமூகத்தை தேசிய ஒருங்கிணைப்புடனான சமாதான சமூகமாக மாற்றுவதினை இலக்காகக் கொண்டு அன்பின் கல்விக் கூடம் எனும் வேலைத்திட்டம் இடம்பெறவுள்ளது. (63)

# நிர்வாகத்தெரிவு

(வடமராட்சி)

பொலிகண்டி கந்தவனக்கடவை கல்யாணவேலவர் ஆலய அன்னதான சபையின் புதிய நிர்வாகத்தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய தலைவராக ம.ஆறுமுகம், உபதலைவராக ப.குமரேஸ்வரன், செயலாளராக ஆ.சிவபாதசுந்தரம், உப செயலாளராக த.சுந்தரமூர்த்தி, பொருளாளராக வி.சிவஞானசேகரம், மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (116)

# முரசின் இன்றைய பலன்



(01.07.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் ஆனிமாதம் 17 ஆம் திகதி.
சதுர்த்தி / சித்தம்.
ஆயிலிய நட்சத்திரம் பி.ப. 02.08 வரை. பின் மகம்.
இராகு காலம் 02.56 - 04.26 வரை. சுபநேரம் 10.26 - 11.56 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மாதாவின் தேக சௌக்கியத்தைக் கருத்தில் கொண்டு பயணத்தைக் கைவிட உத்தேசித்தல். வெளியூர் உறவினரின் வருகை தாமதப்பட்டதால் சுப காரிய நிகழ்வு ஒத்திவைத்தல். |
| ரிஷபம் | வியாபாரப் போட்டியினால் அக்கம் பக்க வர்த்தகநிலையத்தாருடன் முரண்படல். விதி முறைக்கு மாறாக மனை கட்ட முயன்றமையினால் தடுத்து நிறுத்தப்படல். |
| மிதுனம் | அரசுப்பணியில் உள்ளோர் தொழில் நிமித்தம் அலைச்சலும் அகால போஜனமும் ஏற்படல், ஏற்பூசி போட அலட்சியமாக இருந்தமையினால் நோயின் தாக்கம் ஆபத்தைக் கொண்டுவரல். |
| கடகம் | திருமணப் பொருத்த நிர்ணயம் பற்றி சோதிடர் மத்தியில் மாறுபட்ட அபிப்பிராயம் இருப்பதைக் கண்டு ஒரு முடிவிற்கு வர இயலாதிருத்தல், தொலைந்த பொருள் பற்றிய தகவல் கிட்டியதால் ஆனந்தமடைதல். |
| சிம்மம் | அவசரமாக வேலையில் ஈடுபட்ட வேளை கவனக்குறைவினால் விபத்து நேரிடல், கொடுத்தவாக்குறுதியை நிறைவேற்றியமையினால் பதகளிப்பு அகலுதல். |
| கன்னி | திட்டமிடாது எழுந்தமானத்தில் பணி நிறைவேற்ற முயல்கையில் பிரச்சினைகள் எழுதல், பணப்பற்றாக்குறையினால் மனை பூர்த்தியாக்கப்படாது இருப்பதை எண்ணித்துக்கமடைதல். |
| துலாம் | மயிர்கொட்டி, குளவியின் தாக்குதலினால் உறுப்புக்கள் பாதிக்கப்படலாம். குடும்பத்தில் சில நாட்களாக நிலவிக் கொண்டிருந்த பூசல் மறைந்து சுமுக நிலை ஏற்பட்டு விடல். |
| விருச்சிகம் | திருத்த முடியாத புத்திரனை எண்ணி பெற்றோருக்கு கவலை தக்க வைத்தல், பதவிக்கு கேடுவருமென உணர்ந்ததால் மேலதிகாரிகளைச் சந்திக்க முன்வரல். |
| தனுசு | ஏற்பட்ட மன அழுத்தத்தினின்றும் விடுபட நூல்களை வாசிக்க முன்வாருங்கள், புகைப்படத்துடன் செய்தியும் தகவல் தொடர்பு சாதனத்தில் வந்து விடலாம் என்று அச்சமடைதல். |
| மகரம் | செயற்கை முறையில் புத்திர பாக்கியம் கிட்ட தமிழ் நாடு செல்ல விரும்புத ், பணமுடையினால் காசோலைகள் திரும்புவதினால் கணக்கு மூடப்படும் அபாயம் ஏற்படல். |
| கும்பம் | பிதாவின் அடாவடித்தனத்தைப் பொறுக்கமுடியாது நியாயம் கேட்டதால் ரகளை ஏற்படல், திருமண காலம் பற்றி அறிந்து கொள்ள ஜோதிடரின் ஆலோசனை கேட்டல். |
| மீனம் | அஷ்ட மத்துச்சனி விரைவில் நீங்குவதினால் புதிய முயற்சியில் ஈடுபட உதவியைநாடல், வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனத்தினால் அனர்த்தம் ஏற்படல். |

# காலிறுதியில் கோஸ்டரிக்கா; முதன் முறையாகச் சாதனை

உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு கோஸ்டரிக்கா அணி முதன் முறையாக முன்னேறி சாதனை படைத்துள்ளது.

20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடர் பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதில் கிரீஸ் கோஸ்டரிக்கா அணிகளுக்கிடையிலான போட்டி இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 1.30 மணிக்கு நடைபெற்றது.

ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக ஆரம்பமாகிய ஆட்டத்தின் முடிவு நேரமான 90ஆவது நிமிட நிலவரப்படி, இரு அணிகளும் 1-1 என்ற கோல் கணக்கில் சம நிலையில் இருந்தன. பின்னர் அளிக்கப்பட்ட கூடுதல் நேரத்தில் தங்கள் நாட்டின் சார்பில் இரண்டாவது கோலினை பதிவு செய்ய இரு அணிகளுமே அசுர முயற்சி மேற்கொண்டதால் பார்வையாளர்களிடையே பரபரப்பு தொற்றிக் கொண்டது.

கோல் வலையை நோக்கித் திரும்பிய பந்தை மேற்கொண்டு முன்னேற முடியாமல் தடுத்து நிறுத்துவதில் இரு அணிகளுமே மும்முரம் காட்டியதால் இரண்டாவது கோலினை எய்த முடியாமல் கூடுதல் நேரமும் முடிவடைந்த நிலையில் தண்ட உதை மூலம் இரு



அணிகளுக்கும் தலா 5 வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டன.

தண்ட உதையில் இரு அணிகளும் 3-3 என்ற சமநிலை வகித்த போது கிரீஸ் வீரர் பனிஸ் கெகாஸ் அடித்த கோலினை எதிர் அணி கோல் காப்பாளர் தடுத்து வெளியே விரட்டினார். இதனையடுத்து, கோஸ்டரிக்காவின் மைக்கல் உமனா உதைத்த ஐந்தாவது பந்து படு லாவகமாக வலைக்குள் பாய, தண்ட உதையின் மூலம் 5-3 என கிரீஸை வீழ்த்திய கோஸ்டரிக்கா வெற்றி பெற்றது.

இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வெற்றியின் மூலம் உலகக் கிண்ணக் கால்பந்து போட்டிகளில் முதன்முறையாக காலிறுதிக்குள் நுழையும் கோஸ்டரிக்கா நெதர்லாந்து அணியை எதிர் கொள்ளவுள்ளது.

## இன்றைய ஆட்டம்

Brasil 2014 FIFA WORLD CUP

**ஆர்ஜன்ரீனா எதிர் சுவிஸ்சர்லாந்து**

**இலங்கை நேரம் இரவு 9.30**

**பெல்ஜியம் எதிர் அமெரிக்கா**

**இலங்கை நேரம் அதிகாலை 1.30**

## களத்திற்கு வெளியில்...

ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் நெதர்லாந்து அணிக்கு பெனால்டி வாய்ப்புக் கொடுத்தது நேர்மையற்றது. இதை ஏற்றுக் கொள்ள முடியாது. அந்த அணி வீரர் ரோபனுக்கு பெனால்டி கொடுத்ததில் நியாயம் இல்லை. இந்த பெனால்டியால் தான் நாங்கள் வெளியேற்றப்பட்டோம். இந்த உலக கோப்பையில் எங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லாமல் போய்விட்டது.

**பெல் மார்கெஸ் (மெக்சிக்கோ அணிக் கப்டன்)**

கொலம்பியா வீரர் ஜேம்ஸ் அடித்த முதல் கோல் இந்த உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரின் சிறந்த கோல்களில் ஒன்று. இந்தத் தொடரில் அவர் சிறந்த வீரராக உருவெடுப்பார். பிரத்தியேக திறமை பெற்றிருக்கும் வீரர்கள் வழக்கத்துக்கு மாறாக எதையாவது வித்தியாசமாக செய்வர். மாரடோனா, மெஸ்சி, செஸ் மற்றும் ஜேம்ஸ் ராட்ரிகெஸ் ஆகியோர் விசேட திறமை பெற்றுள்ளனர். அதுதான் அவர்களைச் சிறந்த வீரர்களாக மாற்றுகிறது.

**ஆஸ்கர் டேபரஸ் (உருகுவே பயிற்சியாளர்)**

காலிறுதியில் பிரேசிலை எதிர்த்து ஆடவிருப்பது எங்களுக்கு எவ்வித நெருக்கடியையும் ஏற்படுத்தவில்லை. பிரேசிலை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அந்த அணியில் சிறந்த வீரர்கள் உள்ளனர். அதேநேரத்தில் எங்களிடமும் சில அபாயகரமான வீரர்கள் இருக்கின்றனர். இதை அவர்கள் கவனிக்க வேண்டும். மொத்தத்தில் காலிறுதி ஆட்டம் சுவாரஸ்யமாக இருக்கும்.

**ஜேம்ஸ் ராட்ரிகெஸ் (கொலம்பியா வீரர்)**

பிரேசில் இரசிகர்கள் எதிர்பார்த்ததை நாங்கள் நிறைவேற்றி விட்டோம். தண்ட உதை மூலம் வெற்றி பெறுவது என்பது கடினமானது. எங்கள் அடுத்த ஆட்டங்களில் இவ்வாறான முடிவுகள் இருக்காது என நம்புகிறேன். ஏனெனில், மன நோயால் எங்கள் குடும்பத்தினர் பாதிக்கப்படுவர்.

**ஜூலியோ சிஸார் (பிரேசில் கோல் காப்பாளர்)**

கால்பந்து வரலாற்றில் புதிய வரலாறு படைக்க எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. பிரேசில் கடினமான முடிவுகளை எடுக்கவும் வாய்ப்புக்களை உருவாக்கவும் விரும்பவில்லை. அவர்கள் பெனால்டி தண்ட உதைக்காக காத்திருந்ததுபோலத் தெரிந்தது. கிட்டத்தட்ட நாங்கள் வெற்றிக்கு அருகில் வந்து விட்டோம் ஆனால், தண்ட உதை எங்களுக்கு சாதகமாக இல்லை. எல்லாவற்றையும் விட அதிர்ஷ்டம் வேண்டும். நாங்கள் எப்பொழுதும் வழக்கமான நேரத்தில் வெல்வதையே தான் விரும்புகிறோம். வெற்றி பெற வேண்டும் என்ற நோக்குடன் தைரியமாக களத்தில் முழுமையாகப் போராட வேண்டும் என்று வீரர்களுக்கு ஆலோசனை வழங்கியிருந்தேன். களத்தில் வீரர்கள் செயற்பட்ட விதம் மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த உலகக் கிண்ணத்தை பிரேசில் வெல்லுமா? என்பது எனக்குத் தெரியாது.

**ஜோர்ஜ் சம்போலி (சிலி பயிற்சியாளர்)**

கிடைத்த சில வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்தவில்லை என்றால் நீங்கள் வெளியேற வேண்டியிருக்கும். நாங்கள் ஏறக்குறைய 118ஆவது நிமிடத்தில் அதற்கான விலையைக் கொடுத்திருப்போம். (அந்த நிமிடத்தில் சிலி வீரர் பிலில்லா அடித்த பந்து மயிரிழையில் கோல் கம்பத்தில் பட்டு வெளியேறியது). 2ஆவது கோல் அடிக்க எங்கள் அணிக்கு 3 அல்லது 4 வாய்ப்புக்கள் வரை கிடைத்தது. அதனை நாங்கள் சரியாக உபயோகப்படுத்தவில்லை. பந்தை அதிக நேரம் வசப்படுத்தியும், கோலை நோக்கி அதிக தடவைகள் அடித்தும் கோல் அடிக்க முடியவில்லை என்றால் நிச்சயம் கடினமான சூழ்நிலையை சந்திக்க வேண்டி வரும். அதிர்ஷ்டத்தால் தான் எங்களுக்கு இந்த வெற்றி கிடைத்தது. சிரேஷ்ட வீரர்கள் கூட நெருக்கடியுடன் தான் ஆடுவதாக உணர்கிறார்கள். வரும் ஆட்டங்களில் நாங்கள் தவறுகளை குறைக்க வேண்டும்.

**லூயிஸ் பெலிப் ஸ்காலரி (பிரேசில் அணி பயிற்சியாளர்)**

## பாவையர் நெஞ்சைக் கொல்லும் பார்வை இது



கால்பந்துக் களத்தில் கலக்கும் நெய்மர், காதல் கலையிலும் கில்லாடி தான். 19 வயதில் ஒரு குழந்தைக்குத் தந்தையான பெருமை மிக்க இவரது வலையில் அழகுப் பெண்கள் விழுவது வாடிக்கையாக உள்ளது.

பிரேசில் அணியின் சிறந்த முன்கள வீரர் நெய்மர் (வயது-22). தற்போதைய உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் இதுவரை நான்கு கோல் அடித்துள்ள இவர், 3 பெண்களை கவர்ந்துள்ளார். இவரது பார்வையில் முதலில் சிக்கியவர் பிரேசில் மொடல் கரோலினா டொன்டாஸ், (வயது-19). இருவருக்கும் நெருக்கம் அதிகமானதன் விளைவாக... 2011 இல் ஒரு மகனை பெற்றெடுத்தார் டொன்டாஸ். அப்போது 19 வயதான நெய்மர் கூறுகையில், நான் அப்பாவான செய்தியைக் கேட்டு பயத்தில் அழுது விட்டேன். 2.8 கி.கி., எடை கொண்ட மகிழ்ச்சியான குழந்தை. புதிய பொறுப்பு வந்துள்ளது, என்றார்.

சிறிது நாட்களில் டொன்டாசுக்கு டாட்டா காட்டி விட்டு, பிரேசில் நடிகை புருனா மார்கிசின் பக்கம் தாவினார் நெய்மர். இந்த காதலும் அதிக நாட்களுக்கு நீடிக்கவில்லை. கடந்த பெப்ரவரியில் இருவருக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. இதனால் நெய்மர் மனம் உடைந்து போகவில்லை. மாறாக பிரேசிலின் சூப்பர் மொடல் காப்ரியல்லா லென்சிக்கு வலை விரித்தார். இருவரும் ஒன்றாக ஊர் சுற்றிய நிலையில், அதிரடி மாற்றம் அரங்கேறியது.

அதாவது, உலகக் கிண்ணத் தொடரின் போது நெய்மர் அறையில் பழைய புருனா மார்கிசினை காண முடிந்தது. இருவரும் சேர்ந்து கைத்தொலைபேசி மூலம் எடுத்துக் கொண்ட படங்கள் சமூகவலைத் தளங்களில் வெளியாகின. இதனால் நெய்மர் மனதில் இருப்பது புருனாவா அல்லது லென்சியாவா என்ற புதுக் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

நெய்மரை போன்ற உலகின் பணக்கார, திறமையான, ஸ்டைலான இளம் கால்பந்து வீரரின் வாழ்க்கையில், காதல் கணக்கு அதிகரிக்கத்தானே செய்யும்.

## சாய்னா சம்பியன்



(சிட்னி)

அவுஸ்ரேலியன் சூப்பர் சீரீஸ் பட்மின்ரன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நெஹ்வால் சம்பியன் பட்டம் வென்றார்.

விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீராங்கனை கரோலினா மரினுடன் நேற்று முன்தினம் மோதிய சாய்னா, இழுபறியாக அமைந்த முதல் செட்டில் 21-18 என்ற கணக்கில் வென்று முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டில் அதிரடியாக விளையாடி ஆதிக்கம் செலுத்திய அவர் 21-18, 21-11 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை கைப்பற்றினார்.

இப்போட்டி 43 நிமிடம் நீடித்தது. சம்பியன் பட்டம் வென்ற சாய்னாவுக்கு முதல் பரிசாக 34 இலட்சம் கிடைத்தது. இந்த ஆண்டு ஆரம்பத்தில், டில்லியில் நடைபெற்ற இந்தியன் ஓபன் கிராண்ட் பிரீ கோல்ட் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற அவர், 2014இல் 2ஆவது முறையாக பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியைத் தொடர்ந்து, உலக தரவரிசையில் சாய்னா முதல் 5 வீராங்கனைகளுள் ஒருவராக இடம் பிடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



## கால்பந்துத் துளிகள்...

உருகுவே அணியை வீழ்த்தி உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரின் காலிறுதிக்கு முதல் முறையாக முன்னேறியதை கொலம்பியா நாட்டு இரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். இதில் ஒரு இரசிகர் உற்சாக மிகுதியில் தனது துப்பாக்கியை எடுத்து வான் நோக்கி சுட்டதில், ஒரு தோட்டா தவறுதலாக 25 வயது பெண் மீது பாய்ந்தது. இதில் படுகாயமடைந்த அந்தப் பெண் பரிதாபமாக உயிரிழந்தார்.

பிரேசில் - சிலி மோதிய ஆட்டம் பரபரப்பான பெனால்டி தண்ட உதை கட்டத்தை எட்டியதை அடுத்து, தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பைப் பார்த்துக் கொண்டிருந்த பிரேசில் இரசிகர்கள் பலருக்கு இரத்த அழுத்தம் எக்கச்சக்கமாக எகிறியது. இதில் கடுமையான நெஞ்சு வலி ஏற்பட்டு வலியால் துடித்த ஒரு இரசிகர் மாரடைப்பால் மரணமடைந்தார். இந்தப் போட்டியின்போது மட்டும் 100இற்கும் மேற்பட்ட இரசிகர்கள் அவசர சிகிச்சைக்காக மருத்துவ மனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இரசிகர்களிடையே மூண்ட கைகலப்பில் மூக்கு உடைந்த இளைஞர் ஒருவரும் சிகிச்சை பெற்றுள்ளார்.

## பெண்கள் கால்பந்து வென்றது வலிகாமம்

(திக்கம்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பெண்கள் கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றில் வலிகாமம் கால்பந்தாட்ட அணி வெற்றிபெற்றது.

இப்போட்டி கடந்த சனிக்கிழமை வடமராட்சி திக்கம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் வடமராட்சி நக்கீரன் அணியும், வலிகாமம் கால்பந்தாட்ட அணியும் மோதியன.

போட்டியின் 12 ஆவது நிமிடத்தில் வலிகாமம் அணியின் எஸ்.சானு முதலாவது கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து 21 ஆவது நிமிடத்தில் நக்கீரன் அணியின் என்.தர்சினி பதில் கோலைப் போட்டு போட்டியைச் சமன் செய்தார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய சானு மேலும் ஒரு கோல் போட்டு வலிகாமம் அணியை முன்னிலைப்படுத்தினார். இந்நிலையில் முதற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இருப்பினும் வலிகாமம் அணி வீராங்கனை எஸ். பவதாரணி எவரும் எதிர்பாராத நேரத்தில் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியின் ஸ்திரத் தன்மையை வலுப்படுத்தினார். இறுதியில் வலிகாமம் பெண்கள் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்போட்டி நிகழ்வில் அதிகளவானோர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக் பெருவெற்றி





(முல்லைத்தீவு)

பருத்தித்துறை லீக் அணிக்கெதிரான கால்பந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு லீக் அபார வெற்றிபெற்றது.

லீக் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டித் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் மற்றும் முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த 28ஆம் திகதி முல்லைத்தீவு உடுப்புக்குளம் விளையாட்டு மைதானத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது.

போட்டி ஆரம்பம் முதல் இறுதி வரை பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்றது. முற்பாதி ஆட்டத்தில் முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கிற்கு கிடைத்த இரு கோல் அடிக்கும் சந்தர்ப்பங்களையும் சாதுரியமாகப் பயன்படுத்தினர். ஐந்தாவது நிமிடத்தில் முல்லைத்தீவு லீக் அணியின் பிரசாந் முதலாவது கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து 23ஆவது நிமிடத்தில் துஷி இரண்டாவது கோலைப் போட்டு முல்லைத்தீவு லீக் அணியை ஸ்திரமடையச் செய்தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணி பந்தை தமது கட்டுப்பாட்டில் அதிக நேரம் வைத்திருந்தபோதிலும் கோல் அடிக்கும் வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டது. குறிப்பாக, முல்லைத்தீவு லீக் அணியின் பின் கள வீரர் தர்சன் மற்றும் கோல் காப்பாளர் நிப்ராஸ் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் முயற்சிகள் அனைத்தும் தவிடுபொடியாக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் முல்லைத்தீவு லீக் அணிக்குக் கிடைத்த கோல் அடிக்கும் வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்ட அஞ்சயன் 14ஆவது நிமிடத்தில் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இதன் பின்னர் இரு அணிகளும் கோல்களைப் போட்டுக்கொள்ள முனைப்புடன் செயற்பட்டபோதும் அது கைகூடவில்லை. நிறைவில் முல்லைத்தீவு லீக் அணி 3-0 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணியை வீழ்த்தியது.

## வலைப்பந்து இறுதியில் யாழ். மாவட்டம்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட தேசிய ரீதியிலான வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்ட ஆண்கள் அணி முன்னேறியுள்ளது.

இப்போட்டித் தொடரின் காலிறுதி, அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் களுத்துறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. ஆண், பெண் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் பெருமளவான அணிகள் பங்குகொண்டன.

ஆண்கள் பிரிவின் முதல் போட்டியில் அம்பாறை, யாழ். மாவட்ட அணிகள் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 30-08 என்ற புள்ளிகள் அடிப்படையில் பெருவெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

காலிறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், அம்பாந்தோட்டை அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ். மாவட்ட அணி 25-12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், பதுளை மாவட்ட அணியும் மோதின. ஆரம்பம் முதலே யாழ். மாவட்ட அணி புள்ளிகளைக் குவித்தவண்ணமிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பதுளை அணி செயற்பட்டபோதும் வெற்றிக்கான புள்ளிகளாக அவை மாற்றம் பெறவில்லை. இறுதியில் யாழ். மாவட்ட அணி 25-14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93, 48)

## தங்கக் கிண்ணக் கரப்பந்து கிளிநொச்சில் இன்று ஆரம்பம்

(கிளிநொச்சி)

வடமாகாண அணிகளுக்கிடையிலான ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடரின் ஆரம்ப விழா இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவை மன்ற கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் அணிகள் பங்குகொள்ளவுள்ளன. இப்போட்டியில் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இப்போட்டி நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாளைய இளைஞர் அமைப்புக்களின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ, இலங்கை கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் டிலான் பெரேரா உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (93)

## விளையாட்டுச் செய்திகள்

## தெல்லிப்பளை யூனியன் மூன்றாமிடம்

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பளை யூனியன் அணி பெரு வெற்றிபெற்றது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் மூன்றாமிடத்திற்கான போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். பற்றீசியன்ஸ் அணியும், தெல்லிப்பளை யூனியன் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பற்றீசியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரியூடர் 41, கிளிங்ரன் 20, லிவிங்ரன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கபில்ராஜ் மூன்று, தயாளன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 133 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தெல்லிப்பளை யூனியன் அணி சுயந்தனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் யூனியன் அணி 13.4 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சுயந்தன் 38 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 81 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். மற்றும் அகிசன் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நிதர்சன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக சுயந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

(எஸ்.பி.)

## வளர்மதியின் ஆண்டு நிறைவு கரப்பந்து, மென்பந்து கிரிக்கெட்

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 49ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரை நடாத்தவுள்ளது. அத்துடன் தென்மராட்சி பிரதேச மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான மென்பந்து சுற்றுப் போட்டியையும் நடாத்தவுள்ளது.

இப்போட்டித் தொடர்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளை நாளை மாலைக்குள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். இப்போட்டித் தொடரில் வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## ஆவரங்கால் இந்து சம்பியன்

(கெருடாவில்)

கெருடாவில் விவேகாந்தா விளையாட்டுக்கழகம் நடாத்திய மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஆவர ங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றிக் கொ ண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 18ஆம் திகதி விவேகானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், ஆவரங்கால் மத்தி அணியும் மோதின. ஐந்து செட்களைக் கொண்ட இப்போட்டியில் முதல் செட்டை ஆவரங்கால் மத்தி அணி கைப்பற்றி முன்னிலை பெற்றது. பின் சுதாகரித்து சிறப்பான முறையில் செயற்பட்ட ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மூன்று செட்களையும் அடுத்தடுத்துக் கைப்பற்றிக் கொண்டது. இறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

## நியூசிலாந்து முன்னிலை

(பிரிஜ்ரவுன்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான இறுதி டெஸ்ட் போட்டி பிரிஜ்ரவுனில் நடைபெற்று வருகின்றது. நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் நியூசிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் வில்லியம்ஸன் 161, நிசாம் 51 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரோச் நான்கு விக் கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 293. மேற்கிந்தியத்தீவுகள் முதல் இனிங்ஸ் 317

# ரத்தக் கலைஞர்கள் 1

**ராஜேஷ்**



> **“எனக்கு தண்டிக்கும் அதிகாரம் மட்டுமே வழுங்கப்பட்டிருக்கிறது. மன்னிக்கும் அதிகாரம் வழுங்கப்படவில்லை.”**
> **– ஜிந்தா, வெற்றிவிழா.**

தமிழ் சினிமாவின் வெற்றிகரமான வில்லன்களுக்கு ஒரு பட்டியல் போட்டால், அதில் முதல் சில இடங்களுக்குள் வரக்கூடியவர் - வெற்றிவிழாவின் ஜிந்தா. சலீம் கௌஸ் அட்டகாசமாக அறிமுகம் ஆன படம். இந்தக் காலகட்டத்தைப் பற்றி நன்றாக யோசித்துப் பார்த்தால், தமிழின் மறக்கமுடியாத வில்லன்கள் திைரயில் பட்டையைக் கிளப்பிய காலகட்டமாக 1975 முதல் 2000 இருக்கும் என்று தோன்றுகிறது. இன்றும் தமிழில் வில்லனாக நடிப்பவர்கள் அறிமுகம் ஆன காலகட்டம் இது.

புராண/சரித்திர/கறுப்பு-வெள்ளை காலகட்டத்தில் இருந்து மெல்ல மெல்லத் தற்போது பிரபலமாக விளங்கும் ஆக்ஷன் வகைமையை நோக்கித் தமிழ் சினிமா பயணப்பட ஆரம்பித்த கட்டம். அறுபதுகளில் ஜெய்சங்கர் இதனைப் பிரபலப்படுத்தியிருந்தாலும், அந்த பாணியில் பல படங்கள் நடித்து “ஆக்ஷன் கிங்”, “புரட்சித் தமிழன்”, “புரட்சிக் கலைஞர்”, “சூப்பர்ஸ்டார்” என்றெல்லாம் முத்திரை குத்தப்பட்ட நடிகர்கள் அறிமுகம் ஆனதும் இதே காலகட்டம்தான்.

1975இல் இருந்து 2000 வரை தமிழ்ப் படங்களை நோக்கினால், தமிழில் மறக்கமுடியாத வில்லனாக இன்றும் கருதப்படும் ரஜினி அறிமுகமான வருடம் அது (அபூர்வ ராகங்கள்). ரஜினிக்குப் பிறகு தமிழின் சிறந்த வில்லனாக, சத்யராஜை அவசியம் சொல்லமுடியும்.

உண்மையில் இருவரது படங்களையும் ஒப்பிட்டால், சத்யராஜ் அதிகமாகவே ஸ்கோர் செய்வார். ரஜினிக்கு அவரது உடல்மொழி பிரத்யேகமாக அமைந்ததைப்போல், சத்யராஜுக்கு அவரது நக்கல் தெறிக்கும் அலட்சியமான வசன உச்சரிப்பு சாதகமாக அமைந்தது. முதலிட ஹீரோக்களாக இருந்த ரஜினிக்கும் கமலுக்கும் பல படங்களில் சத்யராஜ்தான் வில்லன்.

சத்யராஜின் மறக்கமுடியாத வில்லன் கதாபாத்திரம் - 1986இல் வெளியான கமல்ஹாசனின் “விக்ரம்” படத்தில் சுகிர்தராஜா. நன்றாகக் கவனித்தீர்கள் என்றால், நகைச்சுவைக்கென்றே ஜனகராஜ் இருந்திருந்தாலும், ஒவ்வொரு காட்சியிலுமே பார்வையாளர்களை வெடிச்சிரிப்பு சிரிக்கவைக்கும் வசனங்களை உச்சரிக்கும் நபராக சத்யராஜே இருந்தார். ஆனாலும் அவரிடம் அந்தக் கதாபாத்திரத்துக்கே உரிய ஒரு குரூரமும் வெளிப்படும். “விக்ரோம்” என்று கமலை அழைக்கும் அவரது பிரத்யேக உச்சரிப்பு தனித்துவமானது.

இதேபோல்தான் “காக்கி சட்டை” யின் விக்கி, “ஜப்பானில் கல்யாணராமன்” - நரேந்திரன், “மங்கம்மா சபதம்” - பூபதி, “எனக்குள் ஒருவன்” - ராஜதுரை என்று கமலுடன் நடித்த அத்தனை படங்களிலும் கமலுக்கு ஈடாகப் புகழ்பெற்றார்.

அதுவேதான் ரஜினியுடன் நடிக்கையிலும் “மூன்று முகம்” - தாடி ராஜ், “மிஸ்டர் பாரத்” - கோபிநாத் (இதில் சத்யராஜின் “என்னம்மா கண்ணு” இன்றுவரை பிரபலம்), “நான் சிகப்பு மனிதன்” - மோகன்ராஜ் என்று ரஜினிக்கும் சரிசமமாக வில்லனாக நடித்துப் புகழ்பெற்றார். கூடவே சத்யராஜின் பாத்திரங்கள் “24 மணி நேரம்”, “100ஆவது நாள்” படங்களிலும் மிகவும் பேசப்பட்டன.

சத்யராஜ் பிரபலமான இதே கால கட்டத்தில் எக்கச்சக்கமான படங்கள் நடித்து தமிழின் எண்பதுகளின் பிரத்யேக வில்லனாக இருந்தவர் ராதாரவி. இவரது படங்களின் டைட்டிலில் “ஒப்பனை: கஜபதி” என்றே இவரது ஒப்பனைகளுக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கும். சத்யராஜுக்குப் பின்னர் ரஜினிக்குப் பல படங்களில் இவர்தான் வில்லன். குணச்சித்திர வேடங்களிலும் ஏராளமாக நடித்தது இவரது விசேட அம்சம். எண்பதுகளின் துவக்கத்தில் இருந்து தொண்ணூறுகளின் முடிவு வரை ராதாரவிக்கான தனிப்பட்ட இடம் தமிழ்ப்படங்களில் வேறு யாராலும் நிரப்பப்படவில்லை.

போலவே அதே காலகட்டத்தில் எக்கச்சக்கமான படங்களில் வில்லனாகவும் குணச்சித்திர வேடங்களும் செய்தவர் வினு சக்ரவர்த்தி. இவருக்கும் இவரது குரலே தனிமுத்திரை. அவரது குரலிலேயே இப்போது “ஜிகிர்தண்டா” படத்தில் “டிங் டாங்” என்ற வில்லனுக்குரிய பாடல் வந்திருப்பதே அவரது குரலை இன்னும் பலரும் மறக்கவில்லை என்பதற்குச் சான்று. ரஜினியுடன் பல படங்களில் நடித்திருக்கிறார்.

ராதாரவி அவரது நடிப்பின் உச்சத்தில் இருந்தபோது தமிழில் மென்மையான, உயரமான நடிகர் ஒருவர், தனது இருபத்தி நான்காம் வயதில் “ஏழாவது மனிதன்” படத்தில் தமிழில் அறிமுகமானார். அவர் ரகுவரன். ஒன்றிரண்டு படங்கள் ஹீரோவாக நடித்துவிட்டு 1983இல் வெளியான “சில்க் சில்க் சில்க்” படத்தில் வில்லனாக நடித்தார். பின்னர் மறுபடியும் சில படங்களில் ஹீரோ. இடையிடையே “சம்சாரம் அது மின்சாரம்” போன்ற படங்களில் குணச்சித்திர வேடங்களும் செய்தார்.

1983இல் இருந்து 1989 வரை இப்படி மாறி மாறி நடித்துக் கொண்டிருந்த ரகுவரனுக்கு (இடையே வில்லனாக பூவிழி வாசலிலே.’. படத்தில் சிறப்பாக நடித்திருந்தும்கூட), 1989இல் வெளியான ஒரு தெலுங்குப்படம் அட்டகாசமான புகழைக் கொடுத்தது. அந்தப் படத்தில் இவரது பெயரான “பவானி” என்பது ரசிகர்களின் மனதில் திகிலைக் கிளப்பியது எனலாம். அந்தத் தெலுங்குப்படம் - “ஷிவா” (தமிழில் உதயம்).

இந்தப் படத்துக்குப் பிறகு வழக்கமான அவரது பாணியில் ஒன்றிரண்டு படங்களில் ஹீரோ, வில்லன் என்று மாற்றிமாற்றி நடித்தார். பின்னர் 1994இல் “காதலன்” மற்றும் “பாட்ஷா” ஆகிய படங்களில் மறுபடியும் பிரமாதமாக வில்லனாக நடித்துப் பெயர் வாங்கினார். பின்னர் வழக்கப்படி குணச்சித்திர வேடங்கள். 1999இல் மறுபடியும் “முதல்வன்” படத்தில் வில்லன் அரங்கநாதன் வேடம்.

**(மிகுதி நாளை)**

# விட்டுக் கொடுத்தவருக்குக் கிடைத்த பரிசு!




ஒரு ஊரில் இரண்டு பெரிய மனிதர்கள் இருந்தார்கள். இருவருமே பிறருக்கு உதவி செய்வதில் கர்ணனைப் போல் உயர்ந்த உள்ளம் படைத்தவர்கள். ஒருவர் நீலகண்டன். இன்னொருவர் மணிகண்டன்.

ஒருநாள் நீலகண்டன் தன் வீட்டில் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு பெரியவர், நீலகண்டனிடம் “அய்யா நமது ஊருக்கு மகான் ஒருவர் வந்திருக்கிறார். அவர் இமயமலை அடி வாரத்தில் ஆசிரமம் அமைத்துத் தன் சீடர்களுக்கு உலக அறிவைச் சொல்லிக் கொடுப்பவராம். இப்பொழுது ஒரு யாத்திரை காரணமாய் நம் ஊரில் சில நாட்கள் தங்கி இருக்கிறார். அவரிடம் சென்று நம் ஊர் மக்கள் எல்லோரும் ஆசி பெற்று வருகிறார்கள். நீங்களும் சென்று ஆசி பெற்று வாருங்கள்” என்றார்.

நீலகண்டனும் சரி என்றார்.

நீலகண்டன் மகானிடம் சென்று ஆசி வாங்கி கொண்டார். பின் விடைபெறும்போது குருவே நான் எல்லா வசதிகளையும் அனுபவித்து விட்டேன். யாருக்கும் தீங்கு இளைத்தது இல்லை. இயலாதோர்க்கு உதவி செய்வதைக் கடமையாக நினைப்பவன். எனக்கு சொர்க்கம் கிடைக்குமா? என்று கேட்டார்.

நாளை மறுநாள் காலை இந்த ஊரின் வடக்கு எல்லையில் உள்ள ஆலமரத்திற்குப் போ. அங்கே ஒரு பெரியவர் வருவார். அவர் மகா துறவி. அவருக்கு சாப்பிடுவதற்கு ஏதாவது கொடு. உடனே வானிலிருந்து ஒரு பல்லக்கு வரும், அது உன்னைச் சொர்க்கத்திற்கு அழைத்து செல்லும் என்றார்.

மகானிடம் விடை பெற்றார் நீலகண்டன்.

அடுத்த நாள் மணிகண்டனும் மகானைச் சென்று சந்தித்தார். அவருக்கும் சொர்க்கம் செல்வதற்கான வழியை சொன்னார் மகான்.

அடுத்த நாள் காலை உணவை எடுத்துக் கொண்டு நீலகண்டன் ஆலமரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். மகா துறவி கண்மூடி அமர்ந்திருந்ததை பார்த்த ஆவலில் மகிழ்ச்சியுடன் சென்றார் நீலகண்டன்.

அப்பொழுது மணிகண்டனும் உணவை எடுத்து வந்து கொண்டிருந்தார். அதைப் பார்த்த நீலகண்டன், சரி இருவரும் கொடுப்போம். யாரிடம் துறவி உணவை வாங்குகிறாரோ அவருக்குச் சொர்க்கம் கிடைக்கட்டும் என்று மனதிற்குள் நினைத்து விட்டு தொடர்ந்து நடந்தார்.

ஆனால் மணிகண்டன் என்ன நினைத்தாரோ தொடர்ந்து நடக்காமல் அப்படியே நின்று விட்டார்.

நீலகண்டன் உணவை அந்த மகா துறவி சாப்பிட்டார். வானிலிருந்து ஒரு பல்லக்கு வந்து தூரத்தே நின்ற மணிகண்டனைச் சொர்க்கத்துக்கு அழைத்து சென்றது.

நீலகண்டனுக்கு வருத்தம் இல்லை என்றாலும் குழப்பம் ஏற்பட்டது. உணவு நான் கொடுக்க மணிகண்டனுக்கு எப்படி சொர்க்கம் கிடைத்தது? மீண்டும் சென்று மகானைச் சந்தித்துக் கேட்டார்.

மகான் சொன்னார், “நீ அந்தத் துறவிக்கு உதவி செய்தாய். ஆனால் மணிகண்டன் நீ துறவிக்கு உதவி செய்ய உனக்கு விட்டுக் கொடுத்தார். நீ துறவிக்கு உதவி செய்ய உனக்கு உதவினார் மணிகண்டன். அதனால் அவருக்கு முதலில் சொர்க்கம் கிடைத்தது” என்றார்.

உனக்கும் ஒருநாள் சொர்க்கம் கிடைக்கும் என்று வாழ்த்தி அனுப்பினார் அந்த மகான்.

# பழைய வி

**‘மரம் அரைத்து, மரம் பூசி, மரம் ஏறிச் சென்றவன், சென்றதைப் பார்த்ததாகக் கூறினான்...’**

இது ஒரு பழந்தமிழ் விடுகதை.

விடை புரிகிறதா? கொஞ்சம் யோசியுங்கள். புரியாவிட்ட மரம் அரைத்து - சந்தன மரத்தை அரைத்து, மரம் பூ பாதரட்சை கட்டைகளை போட்டுக் கொண்டு நடந்து சென்றது என்று குறிப்பிட்டது: ஒரு தாய், இடுப்பில் கர்ப்பமாக) ஒரு குழந்தையுடனும் சென்றதை!




# பேசா மடந்தையர்

- இடைக்காடு இளைய பண்டிதன்.

**வா**ய் பேச இயலாதவர் உள்ளிட்ட புலனாற்றல் குறைகொண்டோரும் மற்றும் மனப்பிறழ்வுக்கு ஆளாகியிருப்போரும் “மாற்றுத் திறனாளிகள்;” என்ற மரியாதையான அரவணைப்புடன் “விசேட தேவையுடையோர்” எனும் விதத்தில் விதப்புடனும் பரிவுடனும் பரிகரிக்கப்படுகின்றனர்.

இவ்வெழுத்துருவாக்கத்தின் “மகுட நாயகர்” (Title Heros) நிச்சயமாக இத்தன்மையர் அல்லர். பேசுவதற்கு வாயிருந்துங்கூட தமது அநாவசிய மௌனங்களினால் உண்மைகளை வெளிச்சப்படுத்தாமல் இருட்டடித்து “சமூகப் பிரக்ஞை” (Social conciousness) என்பதனையே கொச்சையாக்கி, அதில் சுகமும் சுவையும் காணுகின்ற வடிகட்டிய சுயநலமிகளாய் (Distiled Self - Seekers) வலம் வருகின்ற - குறித்த சிலரே இந்தப் “பேசா மடந்தையர்”.

ஓர் அவலம் அரங்கேறுமுன்பதாக, அதன் அறிகுறிகளையும் - ஏன் அதற்கான ஒத்திகைகளையும் ஆரம்பத்திலேயே அறிந்து கொண்டிருப்பினும் வாளாதிருப்போரே இவர்கள். வெள்ளம் வருமுன் அணை கட்டுவதற்குத் துணையாயிருந்து உழைக்க வேண்டாம்; அவ்வனர்த்தத்தை அறிய நேர்ந்தவுடன் உரியவர்க்குத் தெரியப்படுத்தினால் அதுவே பெருங்காரியம். ஆனாலும் இந்த அத்தியாவசியச் சமூகக் கடமையினையாவது ஆற்றுதற்கு இவர்களின் அலட்சிய மனோபாவம் முன்வராது.

உதாரணமாக,

குடும்பமொன்றில் ஓர் உறுப்பினரது நடத்தைகள் விபரீதமாகிக் கொண்டிருக்கின்றன என்பதனை இவர்கள் கண்டோ தெரிந்து கொண்டோ தம்முள் வைத்திருப்பர். இந்த மாதரியான ஆபத்தினை குடும்பத் தலைவருக்கு அல்லது பொறுப்பான உறவினருக்கு மறைமுகமாகத் தன்னும் கடைசி வரையும் இவர்கள் உணர்த்தவே மாட்டார்கள் விசக் களையை முளையிலேயே கிள்ளி வீசுவதற்கு “துளிர்த்து வரும் நச்சுச் செடி” மரமாகி விருட்டசமாகு முன் அதனை வேருடனும் வேரடி மண்ணுடனும் பெயர்ப்பதற்கு, இவ்வகையிலேனும் உதவும் எண்ணம் இவர்களுக்குக் கிடையவே கிடையாது.

மாறாக- அந்தத் “தீவினை” மிகத் தீவிரமாகி, அக்குடும்பமே பூதாகர அந்தகாரத்தினுள் அமிழ்ந்து கொண்டிருக்கையில் “இப்படி நடக்கும் என்பது எமக்கு ஏற்கனவே தெரிந்ததே” என்றவாறாக குற்றவுணர்ச்சிக் கூச்சம் கொஞ்சமுமின்றி எள்ளி நகையாடவும் செய்வர். இவர்களைப் பொறுத்தவரை “ஆடு இருந்தால் பால்; இறந்தால் இறைச்சி” அவ்வளவே. உறவினரா... உற்ற நண்பரா... ஊரவரா... இவையெல்லாம் இருக்கட்டும்; சக மானிடப் பிறவிகளா இவர்கள்?!

தற்போதைய சகச நிகழ்வுகளாய் - கண்ணெதிரே சம்பவிக்கச் சாத்தியமான வீதி விபத்துக்களிற் சிக்கி உயிராபத்துக்களை எதிர்நோக்கியிருக்கும் சக மாந்தரைக் காப்பாற்றுவதற்குக் கைகொடுத்துதவாமல் வேடிக்கை பார்த்து விடு விலகுபவர்களும் இவ்வியல்பினரே. விபத்துத் தலங்களைச் சூழ அமைந்திருக்கக் கூடிய கட்டடங்கள், விநியோக மார்க்கக் கம்பங்கள், பாதைக் குறியீடுகள் மற்றும் மரங்கள் போல இவர்களும் வெறும் மௌன சாட்சிகள் தாமா?

இப் பாதக மனிதரைப் பற்றி எண்ணுகையில் அமரமகாகவி பாரதியின் கவிதாவேசம்தான் அகந்தனில் கனன்று கசிகிறது. அவன் தனது பாப்பாப் பாட்டில் “பயங்கொள்ளாது மோதிமிதித்து இத்தகையோர் முகங்களில் (காறி) உமிழ்ந்து விடுமாறு” சினந்துதான் ஆர்ப்பரித்திருக்கிறான்.

ஒரு வகையில் -

அவலங்கள் சற்றேனும் அகலாமல், அவை பேரவலங்களாக நீடிப்பதற்கு, இப் “பேசா மடந்தையரும்” பெரிதும் உடந்தையரே!

# வெள்ளி நகைகள்



- வெள்ளி நகைகள் வெப்பம் உண்டாக்கும் இயல்பு கொண்டவை.
- உடலில் உண்டாகும் இசிவு எனும் நோயை அகற்றக் கூடியது.
- மனதில் மிகுந்த குதூகலத்தை உண்டாக்கக் கூடியது.
- மலச்சிக்கலை நீக்கும் ஆற்றல் பெற்றது.
- உடலின் உள்ளே உள்ள கொதிப்பை அகற்றும் தன்மை கொண்டது.
- மூளைக்கு மிகுந்த வலிமையை உண்டாக்கும் இயல்பு கொண்டது.
- பெண்களுக்கு பெரும்பாலும் கணுக்கால்களில் உள்ள மூட்டுப் பகுதிகளிலும் முழங்கை போன்ற மூட்டுப் பகுதிகளிலும் மூட்டுவலி ஏற்படுவதுண்டு. இதற்கு Rheumatoid arthritis என்று ஆங்கிலத்தில் பெயர். இதனை அகற்ற பெண்கள் கணுக்கால்களில் உள்ள மூட்டுப் பகுதிகளில் கால் விரல்களில் வெள்ளி நகை அணிய வேண்டும்.
- காலில் அணியும் மெட்டியால் வலியில்லாமல் ஈஸியான சுகப் பிரசவம் ஏற்படும் என்பது ஒரு நம்பிக்கை.
- காலில் அணியும் கொலுசு, தண்டையினால் நம்மிடம் இருந்து வெளியேறும் சக்தியை மீட்டு ரத்தம் சுத்திகரிக்கப்பட்டு சக்தி கூடும்.
- தங்கம், வெள்ளி எந்த நகைகளாக இருந்தாலும் நெக்லஸ், செயின், கொலுசு, பிரேஸ்லெட், ஆரம் போன்றவற்றை வைக்கும்போது வளைத்துச் சுருட்டி வைக்கக்கூடாது. வளைத்தால் விரைவில் இணைப்பு விட்டு விடலாம். இதைத் தவிர்க்க நீளமான பெட்டியில் வைக்க வேண்டும்.
- வெல்வெட் துணி, நல்ல வெள்ளைத் துணிகளை இரண்டாக மடித்து அதன் மேல் நகைகளை வைத்தால் நகைகள் புதிது போல் இருக்கும்.
- உருளைக்கிழங்கு வேக வைத்த நீரில் வெள்ளி நகைகளைப் போட்டு எடுத்துக் கழுவித் துடைத்தால் பளிச்சென மின்னும்.
- திருநீறு கொண்டு தேய்த்துக் கழுவினாலும் வெள்ளி நகைகள் கறுப்பு போய் மிளிரும்.

**[நகைகள் பாதுகாப்பும் பயன்களும்]**

# ஜூலை மாதத்தில்...



**ரோ**மாபுரி அரசர் ஜூலியஸ் சீசர் நினைவாக ஜூலை மாதம் ஏற்பட்டது. முதலில் “குவாண்டிலிஸ்” எனப் பெயர் ஏற்பட்டு, பின் ஜூலை ஆனது.

**பிரபலங்களின் பிறந்த தினங்கள்:**

1, 1961 டயானா - இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸை மணந்தவர்.

6, 1930 பாலமுரளி கிருஷ்ணா - கர்நாடக இசைக் கலைஞர்.

6, 1946 ஜோர்ஜ் புஷ் - அமெரிக்காவின் 43ஆவது ஜனாதிபதி.

7, 1981 மகேந்திரசிங் தோனி - இந்திய கிரிக்கெட் வீரர்.

12, 1997 மலாலா பென் - பெண் கல்விக்காகப் பாடுபட்ட பாகிஸ்தானிய இளம் பெண்மணி.

15, 1876 மறைமலை அடிகள் - தமிழ் சிந்தனையாளர், எழுத்தாளர்.

18, 1918 நெல்சன் மண்டேலா - கறுப்பினத்தவர் உரிமைக்காக பாடுபட்ட தென் ஆபிரிக்க தலைவர்.

20, 1919 எட்மண்ட் ஹிலாரி - முதன்முதலாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்தவர்.

26, 1856 பெர்னாட்ஷோ - நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர்.

27, 1876 கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை - கவிஞர்.

**நினைவு தினங்கள்**

2, 1778 ரூஸோ- “சமுதாய ஒப்பந்தம்” புத்தகம் எழுதிய புரட்சியாளர்.

2, 1843 சாமுவேல் ஹனிமன் - ஹோமியோபதி மருத்துவமுறையை அறிமுகம் செய்தவர்.

4, 1902 விவேகானந்தர் - இந்து மதத் துறவி. ராமகிருஷ்ண மடங்கள் அமையக் காரணமானவர்.

4, 1934 மேடம் கியூரி - இருமுறை நோபல் பரிசு பெற்றவர். ரேடியம் கண்டுபிடித்தவர்.

13, 1989 அ.அமிர்தலிங்கம், வெ.யோகேஸ்வரன் - தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள். விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டவர்கள்.

2, 1566 நோஸ்டர்டாமஸ் - உலக நிகழ்வுகளை முன்கூட்டியே சொல்லிய தீர்க்கதரிசி.

21, 1899 இங்கர்சால் - அமெரிக்க நாத்திக சிந்தனையாளர்.

21, 2001 சிவாஜி கணேசன் - தாதா சாகேப், பத்மஸ்ரீ விருதுகள் பெற்ற தமிழ்த் திரைப்பட நடிகர்.

**சுதந்திர தினம் கொண்டாடும் நாடுகள்**

| | |
|---|---|
| 1 கனடா | 14 ஈராக் |
| 1 ருவாண்டா | 17 தென் கொரியா |
| 1 புருண்டி | 20 கொலம்பியா |
| 1 சோமாலியா | 21 பெல்ஜியம் |
| 4 அமெரிக்கா | 22 போலந்து |
| 5 வெனிசுவெலா | 23 எகிப்து |
| மாலவி | 23 எத்தியோப்பியா |
| 9 ஆர்ஜென்டினா | 26 லைபீரியா |
| 10 பஹாமாஸ் | 26 மாலத்தீவுகள் |
| 11 மங்கோலியா | 28 பெரு |
| 14 பிரான்ஸ் | |

**முக்கிய நிகழ்வுகள்**

5, 1997 செவ்வாயில் உயிரினம் வாழ முடியுமா என்ற ஆராய்ச்சிக்காக “சோஜர்ன்” விண்கலத்தை அமெரிக்கா அனுப்பியது.

6, 1907 உலகில் முதல் மோட்டார் பந்தயம் இங்கிலாந்தின் சாரோ மாநிலத்தில் நடந்தது.

7, 1896 முதல் அசையும் திரைப்படம் பிரான்சில் வெளியிடப்பட்டது.

11, 2010 ஜெர்மனி கால்பந்து அணியின் இளம் வீரர் “தோமஸ் முல்லர்” 5 கோல் அடித்து “தங்கச் சப்பாத்து” வென்றார். ஜெர்மனி அணியே கிண்ணத்தையும் வென்றது.

12, 1920 பனாமா கால்வாய் போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டது.

13, 1930 முதல் உலகக் கால்பந்தாட்டம் உருகுவேயில் நடைபெற்றது.

14, 1789 பிரெஞ்சுப் புரட்சி முடிவுற்று பிரான்ஸ் சுதந்திர நாடாக மாறியது.

17, 1897 மார்கோனி தந்திக் குறியீடுகளை ரேடியோ அலைகள் மூலம் அனுப்பினார்.

20, 1976 அமெரிக்காவின் வைகிங் 1 விண்கலம் செவ்வாயில் இறங்கியது.

21, 1960 இலங்கையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பெண் பிரதமராக (உலகின் முதல்) பதவி ஏற்றார்.

20, 1969 அமெரிக்க விண்வெளி வீரர் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் காலடி எடுத்து வைத்துச் சாதனை படைத்தார்.

23, 1983 யாழ்ப்பாணத்தில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதையடுத்து தெற்கில் தமிழர்களுக்கெதிரான இனக்கலவரம்.

23, 25 1983 வெலிக்கடைச் சிறையில் 53 தமிழ்க்கைதிகள் கொல்லப்பட்டனர்.

25, 1978 முதன்முதலாக டெஸ்ட் டியூப் பேபி உருவான நாள்.

26, 1803 உலகின் முதலாவது ரயில் சேவை தெற்கு லண்டனில் ஆரம்பம்.

**முக்கிய தினங்கள்**

1 உலக சிரிப்பு தினம்

7 உலக சொக்லேற் தினம்

11 உலக மக்கள்தொகை தினம்

18 சர்வதேச மண்டேலா தினம். (மண்டேலா நினைவு தினம்)

26 உலக ஹெப்படிட்டிஸ் விழிப்புணர்வு தினம்

29 உலக புலிகள் தினம்

**...விடுகதை!**

**...றவன், மூன்று பேர், இரண்டு கால்களால் நடந்து**

...பாவிட்டால், தொடர்ந்து படியுங்கள்.

...மரம் பூசி - சந்தனத்தை உடம்பெல்லாம் பூசி, மரம் ஏறி - ...டந்து சென்ற ஒருவன், மூன்று பேர் இரண்டு கால்களில் ...டுப்பில் ஒரு கைக் குழந்தையுடனும், வயிற்றில் (நிறை




## குட்டி கல்லுச் சாமி!

ஒரு கிழவர் தன் பேரனான சிறுவனுடன் கோவில் ஒன்றுக்குச் சென்றார். அந்தப் பையனிடம் கற்சிலையைக் காட்டி, அதைக் கும்பிடும்படி கேட்டுக் கொண்டார். சுட்டிப்பயல் உடனே, கல்லை எதற்குத் தாத்தா கும்பிடச் சொல்கிறீர்கள்? என்று கேட்டான்.

உடனே கிழவர், இது கல் இல்லை. கடவுளின் சிலை. இதைக் கும்பிடு என்று கூறினார். பையனும் கைகூப்பிக் கும்பிட்டான் - அந்தக் கற்சிலையை. சாமி தரிசனம் முடிந்ததும் அருகில் இருந்த ஹோட்டலுக்கு மதிய உணவு சாப்பிடச் சென்றார்கள்.

சோற்றில் சிறு கல் ஒன்றைப் பார்த்துவிட்ட அந்தப் பையன் உற்சாக மிகுதியால், தாத்தா! தாத்தா!! குட்டிச்சாமி இதோ என்று கும்பிட ஆரம்பித்து விட்டான். உடனே கிழவர் செய்வதறியாது, உடனிருந்தவர்களுடன் கூடித் தானும் சிரித்து விட்டார்.

## பொன் மொழிகள்

01) ஆடுகளைத்தான் கோவில்கள் முன்பாக வெட்டுகிறார்களேயொழிய சிங்கங்களை அல்ல ஆடுகளாக இருக்கவேண்டாம் சிங்கங்களைப் போன்று வீறு கொண்டெழுமின்.

02) வெற்றியோ தோல்வியோ எதுவரினும் கடமையைச் செய்வோம். யார் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும்போது பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்.

03) எவனொருவன் தானே சரணடையாமல், மற்றவர்களின் இச்சைப்படி செயற்படாமல், எதனையும் சோதனைக்குட்படுத்தி அறிவு வெளிச்சத்தில் அலசி ஏற்கின்றானோ அவனே சுதந்திர மனிதன்.

04) நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று. முதல் தெய்வம் அறிவு இரண்டாவது தெய்வம் சுயமரியாதை மூன்றாவது தெய்வம் நன்னடத்தை. இவற்றைத் தவிர வேறு தெய்வங்கள் எனக்கு இல்லை.

05) சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகள் ஜனநாயகத்தை அழிக்கின்ற கறையான்கள் ஆகும். ஆதலால், மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றைக் கொண்டதே உண்மையான ஜனநாயகம் ஆகும்.

06) உங்களின் வறுமை உடன் பிறந்தது தவிர்க்க முடியாதது, தீர்க்க முடியாதது என்றெண்ணுவது மடமையாகும். அடிமை வாழ்வு தான் கிடைத்த கதி என்ற எண்ணத்தைக் குழிதோண்டிப் புதையுங்கள்.

07) ஒரு இலட்சியத்தை மேற்கொள்ளுங்கள். அதை அடைவதற்காக விடா முயற்சியுடன் உழைத்து முன்னேறுங்கள்.

08) சமூகத்தை உயர்த்த வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தில் உந்தப்படுபவரே உயர்ந்த மனிதர்.

09) முக்கியமான மூன்று விஷயங்களில் நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அவை பொது ஒழுக்கம், முன்னேற்றத்தில் சிரத்தை, சிந்தனையில் மகத்தான புரட்சி என்பனவாகும்.

## இன்னோர் ஆத்திசூடி

1. அழுபவன் கோழை
2. ஆவின் பால் இனிது
3. இரவினில் தூங்கு
4. ஈவது மகிழ்ச்சி
5. உள்ளதைப் பேசு
6. ஊமைபோல் இராதே
7. எதையும் ஊன்றிப் பார்
8. ஏசேல் எவரையும்
9. ஐந்திற் கலை பயில்
10. ஒற்றுமை வெல்லும்
11. ஓரம்போ தெருவில்
12. ஔவை தமிழ்த்தாய்
13. கணக்கில் தேர்ச்சிகொள்
14. சரியாய் எழுது
15. தமிழ் உன் தாய்மொழி
16. நல்லவனாய் இரு
17. பல்லினைத் தூய்மை செய்
18. மற்றவர்க்குதவி செய்
19. வண்டி பார்த்து நட

## சுதந்திரதேவி சிலை



நியூயோர்க் துறைமுக வாயிலில் அமைந்துள்ள லிபர்டி தீவு எழில் கொஞ்சும் தீவு ஆகும். இத்தீவிற்கு, மேலும் அழகு சேர்க்கும் விதத்தில் அமைந்துள்ளதே சுதந்திர தேவி சிலை. அமெரிக்காவுக்கு பிரான்ஸ் அன்பளிப்பாக வழங்கிய சுதந்திர தேவி சிலையினை உலக வரலாற்றின் ஒப்பற்ற பரிசு என்று கூறலாம். அமெரிக்கா சுதந்திரம் அடைந்து நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிய 1886 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28 ஆம் திகதி நியூயோர்க் நகரில் இந்தச் சிலை அமைக்கப்பட்டது.

பாரிசில் உள்ள புகழ்பெற்ற ஈக்பல் கோபுரத்தை குஸ்தாவ் ஈக்பெல் என்னும் பொறியியலாளர் வடிவமைத்தார். இதனை அடிப்படையாகக் கொண்டு டெலக்ரவா என்பவர் ஓவியமாக வரைந்து தந்தார். இந்த ஓவியத்தை வைத்து பிரெடெரிக் பார்த்தோடியால் என்ற பிரான்ஸ் நாட்டுச் சிற்பியால் உருவாக்கப்பட்டதே சுதந்திர தேவி சிலை. இதன் காப்புரிமையினையும் இந்தச் சிற்பி வாங்கியுள்ளார்.

பாரிசின் ஈகிள் கோபுரத்தை வடிவமைத்த மோரிஸ் கோச்சலின் என்ற பொறியியளாளர்தான் சுதந்திர தேவியின் உட்கட்டமைப்பையும் வடிவமைத்தார்.

இச்சிலை 12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. உயரம் 151 அடி. பீடத்தின் உயரம் 154 அடி. மொத்த உயரம் 305 அடி. சிலையின் எடை 252 தொன். இடுப்புச் சுற்றளவு 35 அடி. வாயின் அகலம் மட்டும் 3 அடி. வலது கையில் தீச்சுடரினை ஏந்தி நிற்பது போல் உள்ளது. இதன் உயரம் மட்டும் 42 அடி சிலையில் உள்ள கையில் இருக்கும் ஆட்காட்டி விரலின் நீளம் 8 அங்குலம் (ஏறத்தாழ 3/4 அடி). இதன் உயரத்தைக் கற்பனைக் கண்களால் பார்த்தால், சாதாரண மனிதனின் உயரம போல் சுமார் 60 மடங்கு.

ரோம் நகரப் பெண்களின் பாரம்பரிய உடையான ஸ்டோலோவை அணிந்துளள நிலையில் சிலை காணப்படுகிறது. சிலையின் இடது கையில் சட்டப் புத்தகத்தைக் ஏந்தியபடி உள்ளது. அதன் முகப்பில் அமெரிக்கச் சுதந்திர தினத்தைக் குறிக்கும் யூலை 4, 1786 என்று ரோமன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுளளது. வலது கையில் சுதந்திரத் தீச்சுடர் உள்ளது. பாதம் அடிமைத்தளை அறுக்கபபட்ட நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தலையில் கிரீடம் உள்ளது. இதில் 7 கதிர்கள் (கிரகணங்கள்) உள்ளன. உலகின் 7 கண்டங்களிலும், 7 கடல்கள் உள்ள பரப்பளவிலும் சுதந்திர ஒளி பரவட்டும் என்று சொல்லத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

சிலையின் உள்ளே 354 படிக்கட்டுகளும், 25 ஜன்னல்களும் உள்ளன. பிரான்சில் செய்யப்பட்டு, தனித்தனியாகப் பிரித்து, 24 பெட்டிகளில் வைத்து, கப்பலில் கொண்டுவந்து அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி குளேவர் கிளீவலாண்டசி 1886 இல் திறந்து வைத்தார். அமெரிக்காவின் தேசியச் சின்னமாக விளங்குகிறது.

பீடத்தினை அமெரிக்காவும், சிலையினை பிரான்சும் வடிவமைத்தன. அந்த நேரத்தில் இரு நாடுகளிலுமே கடுமையான நிதி நெருக்கடி இருந்தது. பலவிதமான கேளிக்கைகள் நடாத்தி, கொடுத்த வாக்கை நிறைவேற்றிக் கொடுத்தது பிரான்ஸ். தங்களுக்குக் கொடுத்த பரிசுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், பாரிசில் வாழும் அமெரிக்க மக்கள், சுதந்திர தேவி சிலை போன்ற இன்னொன்றை உருவாக்கி, பிரான்ஸ் மக்களுக்குப் பரிசாகக் கொடுத்தனர். லீடெஸ்சைக்னஸ் என்ற இடத்தில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையை உருவாக்க 45 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவானதாம்.

உலக வர்த்தகமைய இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு சுதந்திர தேவி சில்லையினைப் பார்வையிட பார்வையாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கப்பட்டுள்ளது. இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் சிலையினைப் பார்த்துச் செல்கின்றனர். மான்ஹாட்டன் தீவிலிருந்து லிபர்டி தீவிற்குச் சென்றுவர படகுப் போக்குவரத்து உள்ளது. கடல்வழியாகச் செல்பவர்கள் தூரத்திலிருந்து பார்க்கும்போது, கம்பரத் தோற்றமுடைய ஒரு பெண்மணி சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சியில் இருப்பது போன்ற தோற்றத்துடனும், கடலில் மிகப் பெரிய வீரன் வெற்றிக் களிப்போடு தீச்சுடரை ஏந்திவருவது போன்ற கம்பீரத் தோற்றத்துடனும் காட்சியளிக்கிறது.

## துணுக்குகள்

- மனிதனின் உடலில் விளையாட்டு பீரங்கி ஒன்றை வெடிக்கச் செய்யும் அளவுக்குப் பொட்டாசியம் உள்ளது.
- ஒரு மனிதன் தினமும் சராசரியாக 23,000 முறை சுவாசிக்கிறான்.
- நாம் தும்மும்போது வெளியேறும் காற்று மணிக்கு 160 கி.மீ.வேகம் இருக்கும்.
- நாம் இருமும்போது வெளியேறும் காற்று மணிக்கு 96 கி.மீ. வேகம் இருக்கும்.
- மனித மூளையில் 80 முதல் 85 சதவீதம் தண்ணீர் உள்ளது.
- சட்டையைக் கண்டுபிடித்தவர்கள் எகிப்து நாட்டவர்.
- முகப்பவுடரைக் கண்டுபிடித்தவர்கள் இத்தாலியர்.
- பெயிண்ட் கண்டுபிடித்தவர்கள் இங்கிலாந்து நாட்டவர்.
- அய்ஸ் கிரீமைக் கண்டு பிடித்தவர்கள் சீனர்கள்.
- 0 ஐக் கண்டுபிடித்தவர்கள் இந்தியர்கள்.

## நிறந்தீட்டிப் பார்ப்போம்



# வலி.மேற்கில் இந்தியவீட்டுத்திட்டம்

# முதற்கட்டமாக 176 வீடுகள் பூர்த்தி

## – பிரதேச செயலர் தெரிவிப்பு –

யாழ். சண்டிலிப்பாய் பிரதேச செயலகர் பிரிவில் இந்திய வீட்டுத்திட்டத்தில் வீடுகளை கட்டுவதற்கான உதவிகளை 501 குடும்பங்கள் பெற்றுள்ளன இவர்களில் 176 குடும்பங்கள் வீடுகளை முழுமையாகக் கட்டி முடித்துள்ளதாக பிரதேச செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தெரிவித்தார்.அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்

இந்த வீட்டுத்திட்டத்திற்காக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ள குடும்பங்கள், உள நலம் பாதிக்கப்பட்டவர்கள் உள்ள குடும்பங்கள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் அதிக அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் என்ற அடிப்படையில் 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் பயனாளிகள் தெரிவு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பிரதேச செயலகர் பிரிவின் கீழுள்ள 8 கிராம அலுவலர்கள் பிரிவில் இந்த வீட்டுத் திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவுகள் இடம்பெற்றன.

மாதகல் கிழக்கில் 108 குடும்பங்களும் மாதகல் மேற்கில் 181 குடும்பங்களும் மாரீசன் கூடலில் 38 குடும்பங்களும் சாவற்கட்டில் 34 குடும்பங்களும் உயரப்புலத்தில் 14 குடும்பங்களும் ஆனைக்கோட்டையில் 32 குடும்பங்களும் பண்டத்தரிப்பில் 38 குடும்பங்களும பெரிய விளானில் 56 குடும்பங்களும் இந்த வீட்டுத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வீட்டுத்திட்டத்திறகான நிதி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு, வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஒரு வீடு அமைப்பதற்கு 550, 000 ரூபா நிதி வழங்கப்பட்டது. இருப்பினும்,பயனாளிகள் மேலதிக நிதியை இட்டு சுமார் 900,000 ரூபா செலவில் வடுகளை அமைத்து வருகின்றனர்.

மிகுதி வீடுகள் அமைக்கும் பணிகளும் வெகுவிரைவில் முடிவடையவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சித்திரப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான வலய மட்ட சித்திரப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

ஆரம்பப்பிரிவு

வ.தனிஷா (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தி) ,இ.கிஷான்யா (மட்டுவில் கமலா சனிவித்தி) ஜெ.லக்சிகா(யா/ (கொடிகாமம் அ.த.க.பாடசாலை) ஈ.கனிஸ்ரிகா (யா/வரணிவடக்குஅ.த.க. பாடசாலை) உ.பரிதியா (யா/கைதடி குருசாமி வித்தி)

தரம் 2

வ.காவேரி (யா/சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை) கே.நிதர்சனா (கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தி) சு.டிசானா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி) மோ.கஜறாஜ் (யா/கைதடி நவீல்ட் பாடசாலை) சு.அபிசேகன் (மீசாலை வீரசிங்கம் இந்து ஆரம்பப்பாடசாலை)

## ஆய்வு நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஓய்வு பெற்ற வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் அமரர் பத்தினியம்மா திலக நாயகம் போலின் நினைவாக பத்தினியம்மா நிதியமும் வலி .வடக்கு கலாசார பேரவையும் இணைந்து யாழ்ப்பாண நாடகப்பாரம்பரியத்தில் பெண் கலைஞர்கள் ஆய்வு நூல் வெளியீடும் நினைவுரைகளும் வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பத்தினியம்மா நிதியத்தின் தலைவர் ப.இராஜகோபாலன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நூலிற்கான அறிமுக உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் வெளியீட்டுரையினை கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் எந்திரி ஆர் .சுரேஸ்குமார் ஆய்வுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் பதிலுரையினை நூலாசிரியர் கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மா.அருள்ச்சந்திரன் ஆகியோர் வழங்கினர்..

(63)

## அதிபர் கணபதிப்பிள்ளைக்கு மணிவிழாக்கௌரவிப்பு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளையின் மணிவிழாவின முன்னோடி நிகழ்வாக ஊரவர்கள் இணைந்து முன்னெடுத்த மணிவிழாக் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் சிறுப்பிட்டி பாரதி கல்வி நிலையத்தில் இடம்பெற்றது.

நிறுவன இயக்குநர் வை.நிஷாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கௌரவிப்பு உரைகளை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராஜா, புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் இ.கோகுலராகவன், ஓய்வு நிலைக் கிராம அலுவலர் க.ஸ்ரீஸ்கந்தராஜா, ஆசிரியர் சி.சிவரூபன் ஆகியோர் வழங்கினர்.

இடைக்காடு மகா வித்தியாலய அதிபர் அ.அருந்தவநேசன் ஊரவர்கள் சார்பில் வாழ்த்துப் பத்திரம் வழங்கிக் கௌரவித்தார்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க. கனகராசா, கிராம அலுவலர் ஐ.சிவானந்தன் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கௌரவிப்பு நிகழ்வைத் தொடர்ந்து பாரதி கல்வி நிறுவன மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வே.கா.கணபதிப்பிள்ளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி அகவை அறுபதை நிறைவு செய்து மணிவிழாக் காணவுள்ளார். (48)

## பதிவிறக்கப் பெட்டகம்

எழுத்தாளன் முக்கியமல்ல. அவன் எழுதியிருப்பதுதான் முக்கியம். அதாவது, டெக்ஸ்ட் முக்கியம். எழுதியவர் உங்கள் நினைவிலிருந்து அகன்று போய்விடலாம். ஆனால் அவருடைய எழுத்து உங்களுடன் கூடவே இருக்கப் போகிறது. "சொல்பவனை நம்பாதீர்கள். சொல்லப்பட்ட கதையை நம்புங்கள்" என்று ஆங்கில எழுத்தாளர் டி.எச்.லோரன்ஸ் சொல்லியிருப்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இலக்கியத்தில் ஆசிரியரின் நோக்கமும், படைப்பின் இறுதி வடிவமும் எல்லா நேரங்களிலும் ஒத்துப் போவதில்லை. இதற்கு மகத்தான எடுத்துக்காட்டு லியோ டால்ஸ்டாயின் அன்னா கரினினா. அவர் விரும்பியது நன்னடத்தையை வலியுறுத்த வேண்டும் என்பதுதான். ஆனால் அதை மீறி, அது கலைப் படைப்பாக உருவானது. அதனால், இலக்கியப் படைப்புகளை அணுகும்போது, எழுத்தாளர் கூற்றை விட, அப்படைப்பு என்ன அனுபவம் தருகிறது என்பதே முக்கியமானது.

– அசோகமித்திரன்

கலைஞனின் மனம் என்பது ஒரே சமயத்தில் அங்கீகாரத்தை வேண்டுவதாகவும், அதேசமயம் அங்கீகாரத்தின் கவனம் கண்டு பின்னடைவதாகவுமே இருக்கிறது.

– சிங்ளேர்

ஏதோ உட்கார்கிறோம். எழுதுகிறோம். சில சமயம் தரதரவென்று எழுத முடிகிறது. சில நாளைக்கு ஒரு வரிகூட எழுத முடியவில்லை. நாட்கணக்கில் எழுதவே முடிவதில்லை. எழுத வந்தால்தானே! நாலு நாட்கள் வந்து நாட்கள் மண்டையை உடைத்துக்கொண்டு கடைசியில் அழாத குறையாக படுத்து விடுகிறது. காலையில் எழுந்திருக்கும்போது பளிச்சென்று கோவில், சினிமாவுக்கு போகிற ஸ்திரீகள் குக்கரில் வைத்து விட்டு போகிற அரிசி மாதிரி, எல்லாச் சிரமங்களும் விழுந்து, தானாக எண்ணங்கள் பக்குவமாகி இருக்கும். வேகமாக பேனா எழுதிவிடுகிறது. அவ்வளவுதான். – தி.ஜானகிராமன்

மூலப்பிரதியை உள்ளபடி உணர்ந்து வாசிப்பது ஆனந்தத்தின் [கலவியின்பத்தின்] உச்சக்கட்ட நிலைக்கு ஒப்பானது. களிப்பின் எல்லையை அடையும்போது மெய்மறந்த உணர்வு – தன்னை இழந்த, ஆழ்ந்த சமர்ப்பண உணர்வு – மேலிடுகிறது. இந்த ஆனந்தக் களிப்பை எய்தும்போது தன்னுடைய இருப்பின் கடைசி எல்லையை ஏதோ ஒன்று பிடித்து உலுக்கியது போலவும் தன்னுடைய உணர்வின் ஒரு பகுதியை அது எடுத்துக்கொண்டு அதன் உணர்வின் ஒரு பகுதியைத் தந்தது போலவும் தோன்றுகிறது. அதாவது வரலாறு, பண்பாடு மற்றும் உளவியலின் அடிப்படைகள் ஆட்டம் கண்டது போன்ற – ரசித்தல் உணர்வு, மதிப்புகள், நினைவுகள் எல்லாமே புதிராகிவிட்டது போன்ற – அன்றாட வாழ்வின் சலிப்பு கலகலப்பாக மாறியது போன்ற அனுபவம் ஏற்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, மொழியுடன் நாம் எதிர்வினை புரியும்போது ஏதோ ஒருவிதமான பதற்றம் அல்லது நிலநடுக்கத்தின் உணர்வு தோன்றுகிறது. – ரோலான் பார்த்

பசி குடலைப் பிடுங்கும் போது உணவு மட்டுமே போதும் என்று சொல்லாத மனிதனும் இல்லை. பசி ஆறிய போது உணவு மட்டுமே போதுமானது அல்ல என்று சொல்லாத மனிதனும் இல்லை. – சுந்தர ராமசாமி

ஒருமைப்பட்ட மனமும் மூளையும் ஒன்றாகக் கூடிய மோன நிலையே சிருஷ்டிகரம் அல்லது படைப்பூக்கம். அந்த நிலையில் கலைஞனின் நாட்டம் எண்ணிக்கையிலோ அளவில் எத்துணைப் பெரிது என்பதிலோ இருக்க முடியாது. முழுமை மட்டுமே அவனது குறி.மொழுக்கென இருப்பதெல்லாம் முழுமை அல்ல. எடுத்துக் கொண்ட கருவுக்கேற்ற முழுமை. கருப்பொருள் தீர்மானிக்கும் கட்டமைப்பின் முழுமை.

– விமலாதித்த மாமல்லன்

வாசிப்பின் உள்ளடக்கமாக விளங்கும் இலக்கியப்பிரதி அது எழுதப்பட்ட மொழியிலிருந்து வேறானது ஆகவே மொழிக்குள் விளங்கும் இலக்கியத்துக்கு மொழியின் ஆழ்ந்த அதீதத் தன்மையைத் தகர்க்கும் திறன் உண்டு. இலக்கியம் என்பது ஒரு பயங்கர ஆயுதம் போன்றது. இதைக்கொண்டு மொழி தற்கொலை செய்துகொள்கிறது. – ரோடோரோவ்

குழந்தைகள் இலக்கியம் என்பது ஒரு தனி உலகம். பெரியவர்களுக்கான உலகின் தர்க்க நியாயங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது அது. குழந்தை எழுத்தாளன் ஒருவகையில் தானே குழந்தையாகிவிடுகிறான். காலமெல்லாம் குழந்தையாக இருப்பது எத்தனை பெரிய பாக்கியம்! – வாண்டுமாமா

# விளையாட்டு மைதானத்தின் நடுவே மாடுவெட்டும் கொல்களம் அமைப்பு

## விளையாட்டு வீரர்கள் விசனம்



(மன்னார்)

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விடத்தல் தீவு கிராமத்தில் மாந்தை மேற்கு பிரதேச சபையினால் பல இலட்சம் ரூபாய் செலவில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ள போதும் குறித்த விளையாட்டு மைதானத்தின் நடுவில் மாடு வெட்டும் கொல்களம் காணப்படுவதாகவும் இதனால் விளையாட்டு வீரர்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விடத்தல்தீவு கிராம விளையாட்டு வீரர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் குறித்த விளையாட்டு மைதான்ம் புனரமைக்கப்பட்டு சுற்று வேலியும் அமைக்கப்பட்டுள்ளது,

எனினும் குறித்த மைதானத்தில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்ற போதும் பிரதேச சபைத் தலைவர் அசமந்தப்போக்குடன் செயற்படுவதாக அங்குள்ள விளையாட்டு வீரர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சுமார் 70 இலட்சம் ரூபாய் வரை குறித்த விளையாட்டு மைதானத்திற்கு மாந்தை மேற்கு பிரதேச சபை செலவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதும் அவ்வளவு பணம் செலவிடப்பட்டமைக்கான வேலைத்திட்டங்கள் குறித்த மைதானத்தில் இடம்பெறவில்லை என வீரர்கள் தெரிவித்துள்ளனர். மாந்தை மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான மாடு வெட்டும் கொல்களம் ஒன்று குறித்த விடத்தல் தீவு விளையாட்டு மைதானத்தின் நடுவே காணப்படுகின்றது.

இதனால் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் நிகழ்வுகளின் போது குறித்த கொல்களம் பாரிய இடையூறை தோற்றுவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது

,மாந்தை மேற்கு பிரதேச சபைத் தலைவர் தனது சுயநலத்துடன் குறித்த விளையாட்டு மைதானத்தை அமைத்துள்ளார், குறித்த மைதானம் அமைத்தல், அவ்விடத்தில் உள்ள மாடு வெட்டும் கொல்களத்தை அப்புறப்படுத்துதல் போன்றவை தொடர்பில் எவ்வித ஆலோசனைகளையும் இக்கிராமத்தில் உள்ள அமைப்புக்கள் எவற்றிடமும் கலந்து ஆலோசிக்கவில்லை என அக்கிராம மக்களும்,விளையாட்டு வீரர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த மைதானம் அமைத்தலில் பாரிய நிதி மோசடி இடம் பெற்றுள்ளதோடு மைதானத்திற்குள் கொட்டுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட பல டிப்பர் மண்களும் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது,எனவே இனி வரும் காலங்களில் மாந்தை மேற்கு பிரதேச சபையினால் விடத்தல் தீவு கிராமத்தில் முன்னெடுக்கும் எந்தவித வேளைத்திட்டங்களாக இருந்தாலும் பிரதேச சபைத் தலைவரின் சுயநலத்துக்காக மேற்கொள்ளாது விடத்தல் தீவு கிராம மக்களின் ஆலோசனைகளைப் பெற்று வேலைத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு குறித்த கிராம மக்களும், இளைஞர் கழக வீரர்களும் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

# மறவன்புலோ வித்தியாலயத்தில் சுகாதார விழிப்புணர்வு கலைநிகழ்வு




இயற்கை தரும் இனிய வாழ்கைப் பயணம் என்ற தொனிப்பொருளில் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தின் மார்ட்டின் மண்டபத்தில் காவரி கலாமன்றத்தின் வழிகாட்டலில் சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன்சுகாதார விழிப்புணர்வு கலை நிகழ்வு 2014 அண்மையில் நடைபெற்றது.

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தின் முதல்வர் யோ.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந நிகழ்வில பிரதம விருந்தினராக எஸ் டி சி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை திட்ட முகாமையாளர் றெட்டோ யேர்பர் சிறப்பு விருந்தினர்களாக லயன்ஸ கிளப் சாவகச்சேரி டாக்டர் அருளாணந்தம் மற்றும் எஸ். டி. சி. நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளை திட்டப் பணிப்பாளர் மகேந்திரம் தர்சினி கௌரவ விருந்தினர்களாக மறவன்புலோ கிராம சேவையாளர் சுபாஷ் சந்திரபோஷ் மற்றும் காவரி கலாமன்றத்தின் கிளிநொச்சி கிளை பொருளாளர் எஸ். புத்திர சிகாமணி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மறவன்புலோவைச் சேர்ந்தது. மாணிக்கவாசகர் மற்றும் நிமலரூபன் என்போருக்கு சமூக திலகம் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் கும்மி, கோலாட்டம், நாடகம் போன்ற சுகாதார விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன

# சீனன்கலட்டி வித்தியாலயத்தில் மாணவர் திறன் விருத்தி கலைநிகழ்வு



(அளவெட்டி)

அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தில் மாணவர்களின் திறன் விருத்திக் கலை நிகழ்வும் பாரிசளிப்பு விழாவும் கடந்த வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிமுதல் பாடசாலை அதிபர் .சி.சிவராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் .சு.சண்முககுல குமாரன் மற்றும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி அபிவிருத்தி) திருமதி. ரூபா உதயரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் அயற்பாடசாலைகளின் அதிபர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வுகளை சிறப்புற ஒழுங்கமைத்த ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் பாடசாலை அதிபரினால் ஆசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# பனிப்புலம் முத்துமாரிக்கு வருடாந்த மஹோற்சவம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பனிப்புலம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிரவரும் 16 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் திருவிழாவில் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் சம்பறத் திருவிழாவும் 29 ஆம் திகதி இரதோற்சவமும் 30 ஆம் திகதி தீர்த்தேறசவமும் இடம்பெறும்.



**வேலணை பிரதேசசபையினால் உள்ளூ ராட்சி வாரத்தினை முன்னிட்டு வேலணை பிரதேசசபையின் நூலகத்தில் புத்தகக்கண்காட்சி ஒன்று கடந்த வாரம் சிறப்பாக நடாத்தப்பட்டது. இப்புத்தகக் கண்காட்சியினை வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சின்னையா சிவராசா (போல்) நாடா வெட்டித் தொடக்கி வைத்தார் இக்கண் காட்சியினைப் பார்வையிட பாடசாலை மாணவர்கள் பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் என அதிகமானோர் வந்திருந் தனர்**

# சட்டவிரோத புகலிடதாரிகளை தடுப்பதற்கு செயற்றிட்டம்

(கொழும்பு)

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களை தடுப்பதற்காக தொடர்ந்தும் அவுஸ்ரேலியாவுடன் நெருக்கமாக செயற்படவுள்ளதாக இலங்கை அறிவித்துள்ளது.

இலங்கையின் 153 தமிழ் அகதிகளை ஏற்றிய படகொன்று அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை அண்மித்துள்ளது.

தென்னிந்தியாவின் புதுச்சேரியிலிருந்து இவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக பயணத்தை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அந்நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அட்மிரல் திசர சமரசிங்க, அவுஸ்ரேலியாவின் எல்லைப் பாதுகாப்பு கொள்கையை ப்பாதுகாப்பதற்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

படகு மூலம் அவுஸ்ரேலியா செல்வோரை உடனடியாக நாட்டுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைக்கு இலங்கை உதவும எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

# புலமைப்பரிசில் பெற்று தென்கொரியா பயணம்



மடு கல்வி வலயத்தில் தகவல தொடர்பாடல் தொழில்நுட்ப பாட ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி வரும் கு. நாகநாதன் தகவல் தொடர்பாடல் பாடத்தில் வெளிநாட்டிற்கான புலமைப்பரிசில் பெற்று தென் கொரியாவுக்குச் செல்லவுள்ளார்.

புலமைப் பரிசில் பெற்றுக் கொரியா செல்லும் ஆசிரியரை கௌரவிக்கும் நிகழ்வு மடு வலயக்கல்வி அலுவலகத்தில் அண்மையில் மடு வலயக்கல்விப் பணிபபாளர் ஏ.ஜே.குரூஸ் தலைமையில் நடைபெற்றது

27. பின்வரும் எந்தப் பொருட் சோடி மேலிருந்து பார்க்கப்படும் போது ⊙ ◎ எனத் தோன்றும்.



1. 2. 3.

28. பின்வரும் எந்தப் பொருட்சோடி மேலிருந்து பார்க்கப்படும் போது ⊖ ◎ எனத் தோன்றும்.



1. 2. 3.

**அடுத்துவரும் வினாக்களுக்கு உருக்களையும் அவை குறிப்பிடும் விடயங்களையும் பயன்படுத்தி விடை எழுதுக.**



ஆண் பிள்ளை | பெண் பிள்ளை | காலையில் | கோயில் | திரும்பி



வீடு | செல்கின்றது | வருகின்றது | நோக்கிச் | மகிழ்ச்சியுடன

29. 

எதனைக் குறிக்கின்றது?

1. ஆண் பிள்ளை வீடு நோக்கிக் காலையில் செல்கின்றது.
2. ஆண் பிள்ளை கோயிலை நோக்கிக் காலையில் செல்கின்றது.
3. ஆண் பிள்ளை காலையில் கோயிலை நோக்கிச் செல்கின்றது.

30. 

இவ்வுரு குறிப்பது?

1. பெண் பிள்ளை வீடு நோக்கி மகிழ்ச்சியுடன் திரும்பிவருகின்றது.
2. பெண் பிள்ளை வீட்டிற்கு திரும்பி வருகின்றது.
3. பெண் பிள்ளை திரும்பி வீடு நோக்கி வருகின்றது.

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**1 ஆம் 2 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிக.**

**1.** 

1. 2. 3. 4.

**2.** 

1. 2. 3. 4.

**3. இம்மெழுகுதிரிகள் ஒரு குறித்த இயல்பு தொடர்பாக ஒழுங்குபடுத்தி வைத்தால் கிடைக்கத்தக்கவிடை யாது?**



A B C D

1.CBDA 2.BACD 3.DBCA

4. உடைந்த ஒரு வரைகோலின் 4 பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.



1. 2. 3. 4.

வரைகோலை ஆக்குவதற்கு சரியாகப் பொருத்த வேண்டிய விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க

1.4213 2. 2431 3. 3142

5. 

1. 2. 3. 4.

6. 

1 2 3 4 5 6

போத்தலை ஆக்குவதற்குப் பொருத்த நான்கு துண்டுகள் இடம்பெறும் விடையைத் தெரிக.

1. 3215 2. 4532 3. 3521

**7 ஆம் 8 ஆம் வினாக்களிற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.**

7. பலாவுக்குச் சுளைபோன்று மாதுளைக்கு ..............................
 1. பருப்பு  2. முத்து  3. தாறு

8. நீறப்புக்கு கோர்வை போன்று புகையிலைக்கு ..............................
 1. சிப்பம்  2. குலியல்  3. கற்றை

9. ஒவ்வொரு பாத்தியிலும் ஒரு வகை மாத்திரம் இருக்கத்தக்கதாக 5 பாத்திகளில் மரக்கறிப்பயிர்களும், பழமரங்களும் வளர்க்கப்படுகின்றன. பழமரங்கள் வளர்க்கப்படும் பாத்திகளின் எண்ணிக்கை மூன்று ஆகும் மரக்கறிப் பயிர்களும் பழமரங்களும் இருக்கத்தக்க விதத்தைத் தெரிவு செய்க.
 1. கோவா, முள்ளங்கி, அவரை, கொய்யா, தோடை
 2. கோவா, முள்ளங்கி, கொய்யா, தோடை, பப்பாசி
 3. கோவா, வாழை, கொய்யா, தோடை, பப்பாசி

**10 ஆம் 11 ஆம் வினாக்களுக்குப் பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் செய்க.**

10. 


1 லீற்றருக்குச் சமமான படத்தை வரைக.

..............................................................................................

11. 

எதற்குச்சமம்.

 1. 1000ml  2. 1400ml  3. 1600ml

12. பின்வருவனவற்றில் மிகவும் சரியான தொடர்பு.



13. ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 4 கொடிகள் வீதம் தொங்கிட்டு அவ்வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 9 மின்கம்பங்கள் இருந்தால் அவற்றுக்கிடையே தொங்கவிடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?
 1. 32 கொடிகள்  2. 36 கொடிகள்  3. 40 கொடிகள்

14. 2011 ஆம் ஆண்டில் 365 நாட்களும் 2012 ஆம் ஆண்டில் 366 நாட்களும் உள்ளன. 2011 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி புதன் கிழமையாகும். 2012 ஆம் ஆண்டில் ஜனவரி 1 ஆம் திகதி வியாழக்கிழமையாகும். இதற்கேற்ப 2013 ஜனவரி 1 ஆம் திகதி
 1. புதன் கிழமை  2. வெள்ளிக்கிழமை  3. சனிக்கிழமை



15. ஐந்து திங்கட்கிழமைகள் உள்ள ஓர் ஆவணி மாதத்தில் உள்ள திங்கட்கிழமைகளின் திகதிகளின் மொத்தத்திற்கு இருக்கத்தக்க உயர்ந்த பட்சபெறுமானம்
 1. 75  2. 80  3. 85

16. வகுப்பறையில் நிதமும் இருப்பவை.
 1. ஆசிரியரும் மாணவரும்  2. கூரையும் தளபாடங்களும்  3. புத்தகமும் தண்ணீர்ப்போத்தலும்

17. ஒரு புத்தகத்தில் நிதமும் இருப்பவை.
 1. எழுத்துக்கள் படங்கள்  2. கருத்தும் அச்சுப்பிழையும்  3. படங்களும், விளக்கமும்

18. சந்திரன் தோன்றிய ஒருநாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்தபோது வௌவால்கள் செல்வதைக்கண்டேன் என ராணி கூறினாள். இது உண்மையாக இருக்கலாம் இதற்குக் காரணம்.
 1. இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாது.
 2. பகலில் மட்டுமே வௌவால்கள் பறந்து திரியும்.
 3. நிலவில் வௌவால்கள் பறப்பதைப் பார்க்க முடியும்.

19. ராஜியின் ஒரே பிள்ளையாகிய காயத்திரி பாடசாலைக்குத் தாமதமாக வந்து தங்கையுடன் கடைக்குச் சென்று திரும்பி வருவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினார். இது உண்மையாவதற்குக் காரணம்.
 1. காயத்திரிக்குச் சில சகோதரிகள் இருக்கின்றமை.
 2. காயத்திரி  உலவித் திரிய விரும்புகின்றமை.
 3. காயத்திரியின் சிறிய தாயாரின் ஒரு மகளும் அவரின் வீட்டில் இருக்கின்றமை.

20. பாடசாலைச் சேவைப் பேருந்துதாமதமாக பாடசாலைக்கு வருகின்றது.
 1. இது பெரும்பாலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.
 2. இது ஒரு போதும் நடைபெறுவதில்லை.
 3. இது சில வேளைகளில் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

21. நாம் ஒற்றுமையாக இருந்தால் எக்காரியத்தை  யும் சாதிக்க முடியும்.
 1. இது எப்போதும் உண்மையாகும்.
 2. இது பெரும்பாலும் உண்மையாகும்.
 3. இது ஒரு போதும் உண்மையாகாது.

22. காற்று வீசுவதால் வெப்பம் குறைகின்றது. அதற்கான காரணம்.
 1. காற்றுக் குறைகின்றது.
 2. காற்றுக் கூடுதலாக வெப்பத்தை அள்ளிச் செல்கின்றது.
 3. காற்று வீசுவதால் மாற்றமில்லை.

23. கம்பனின் வீடு வள்ளுவரின் வீட்டுக்கு வடக்கே உள்ளது. வள்ளுவரின் வீடு இளங்கோவின் வீட்டுக்கு வடக்கே உள்ளது. ஆகவே
 1. கம்பனின் வீடு இளங்கோவின் வீட்டுக்கு வடக்கே உள்ளது.
 2. இளங்கோவின் வீடு கம்பனின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது.
 3. இளங்கோவின் வீடு வள்ளுவரின் வீட்டிலும் பார்க்க கம்பனின் வீடு அண்மையில் உள்ளது

**வெற்றிடங்களை நிரப்புவதற்கு அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து நிரப்பி எழுதுக.**

விமலா வலைப்பந்தில் மிகுந்த விருப்பத்தைக் கொண்டுள்ளாள். ஆகவே ஆசிரியர் அதற்காக (24) ............................ (உற்சாகப்படுத்துவதற்கு, பயிற்சியளிப்பதற்கு, வழிப்படுத்துவதற்கு) எண்ணினார் விமலா மிகுந்த விருப்பத்துடன் நேரம் தவறாமல் சென்று வலைப்பந்து (25) ............................ (பா., அடிக்க, விளையாட) நன்றாகக் கற்றுக் கொண்டாள். அதனால் விமலா மிகுந்த (26) ............................ (கவலை, இரக்கம், மகிழ்ச்சி) அடைந்தாள்.





கிளிநொச்சி முரசுமோட்டை சேற்றுக்கண்டி முத்துமாரி அம்மன் ஆலய தேர் வெள்ளோட்ட நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது சிற்பாச்சாரியார் ஸ்தபதி பாலச்சந்திரன் கௌரவிக்கப்படுவதையும் சிறப்புரையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் நிகழ்த்துவதையும் தேர் வெள்ளோட்டத்தையும் காணலாம். (66)

# மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வடமாகாணசபை அக்கறை காட்டவில்லை

## பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



மக்களின் வாழ்வாதாரத்தில் உள்ளூர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் காட்டும் அக்கறையைக் கூட வடக்கு மாகாண சபை நிர்வாகம் காட்டவில்லை எனப் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி வடமராட்சி இணைப்பாளருமான ஐயாத்துரை சிறி ரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

கற்கோவளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தையல் பயிற்சி ஐந்தாவது அணியின் தொடக்கவிழாவும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை கற்கோவளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்கத்தின் இணைத்தலைவர் வே.தவச்செல்வம் தலைமையில் இடம்பெறறது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடுத்தர மக்கள், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் என அனைவரும் பொருளாதார ரீதியில் கஷ்டங்களை எதிர் கொண்டுள்ளார்கள்.இவ்வாறான நிலையில் இடம்பெயர்ந்தோர் அமைப்பு கற்கோவளம் மாதர் அமைப்பின் ஒத்துழைப்புடன் சுமார் 50 யுவதிகளை அடையாளம் கண்டு தையல் பயிற்சிகளை வழங்கி வருகிறது. இதனூடாக பயிற்சி பெறும் யுவதிகளின் குடும்பங்கள் சுயமாக ஒரு தையல் தொழிலை ஆரம்பித்து அவர்களின் வாழ்வியலை ஓரளவு வளப்படுத்த முடியும். அதற்கான முயற்சிகளை இவ்வமைப்பு முன்னெடுத்து வருகின்றமை பாராட்டுதலுக்கு உரியது.

வடக்கு மாகாணசபை நிர்வாகம் நடுத்தர மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு என்ன நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளது என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

அதிகாரத்திற்கு வந்து 09 மாதங்களாகி விட்டன. உருப்படியாக ஏதாவது திட்டங்களைத் தீட்டினார்களா? அல்லது செயற்படுத்தினார்களா? தேர்தல் காலத்தில் எவ்வாறான கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை வழங்கினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அதில் ஏதாவது ஒன்றையாவது செயற்படுத்த ஆர்வம் காட்டுகிறார்களா? எம்மை வெல்ல வைப்பதனூடாக எமது பிரதேசத்தின் வாழ்வியலைக் கட்டியெழுப்புவோம் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி த.ஜெயராசா, கௌரவ விருந்தினராக வடமராட்சி கிழக்கு மாமுனையிலிருந்து புலம்யெர்ந்து அமெரிக்காவில் வதிபவரும் வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்பேணும் அபிவிருத்தி அமைப்பிற்கு உதவுபவருமான மயில்வாகனம் சத்தியசீலன், மற்றும் அருட்சகோதரன் க.ஜெயக்குமார், வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வைத்திப்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நினைவுக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

முற்போக்கு ஜனநாயக தேசியவாதியும், இடதுசாரி ஆதரவு நிலைப்பாட்டாளரும், முன்னாள் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மறைந்த தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்காவின் நினைவுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

லங்கா மாக்ஸீச லெனினிச கட்சியின் ஏற்பாட்டில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நினைவுக் கூட்டத்தில் யாழ்.பல்கலைக் கழகமொழியியல் துறை விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன் மற்றும் லங்கா மாக்ஸிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்தில்வேல் மற்றும் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க.தணிகாசலம், சட்டத்தரணி சோ.தேவராஜன் உள்ளிட்டோர் நினைவுப் பேருரை ஆற்றினர்.

இந்நினைவுக்கூட்டத்தில், லங்கா மாக்ஸிச லெனினிச கட்சியின் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவு-மல்லாவி வீதியை மீளமைக்க 458 மில்லியன் தேவை

## வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு



(மல்லாவி)

முல்லைத்தீவு மல்லாவி பிரதான வீதியினை மீளமைப்பதற்கு 458 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட பதில் பணிப்பாளர் ரி.கே.ஐங்கரன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்ட மேற்படி வீதியானது அப்பகுதியிலுள்ள வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களைவிட 4 அடி அதிகமான உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால், வீடுகளிலிருந்து வீதிக்கு ஏறுவது மலைகளில் ஏறுவது போல சிரமமாகவிருப்பதாகவும், இவ்வாறு வீதிகள் இருப்பதினால் வாடிக்கையாளர்கள் வேறு கடைகளில் பொருட்களை வாங்குவதாகவும் அப்பகுதி வர்த்தகர்கள் விசனம் தெரிவித்திருந்தனர்.

அத்துடன், குறித்த பிரதான வீதியை சாதாரண போக்குவரத்தினை மேற்கொள்ளும் வகையில சமதரை வடிவமைப்பு பாதையாக அமைத்து தருமாறு கோரி அப்பகுதி வாழ் மக்கள் மற்றும் வர்த்தகர்கள் கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதனால் குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகள் நிறுத்தப் பட்டன.

இதன் பின்னர் இது தொடர்பாக குறித்த வீதியை மாற்றியமைத்துத் தரும்படி கோரி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண முதலமைச் சர் சி.வி.விக்னேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியோருக்கு அப்பகுதி மக்கள் மகஜர் அனுப்பியிருந்தனர்.

இது தொடர்பான ஆராய்வுகளை மேற்கொண்டு வந்த நிலையிலும் குறித்த வீதி மாற்றியமைப்பது தொடர்பான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# நினைவுச் சிலை திறப்பு

யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஒறேற்றர் சி.சுப்பிரமணியத்தின் நினைவுச் சிலை பாடசாலை முன்றலில் இன்று காலை 9 மணியளவில் திறந்து வைக்கப் படவுள்ளது. ஸ்கந்தா நடை நாகம்ஸ் தியேட்டருக்கு அருகாமையில் ஆரம்பித்து பாடசாலையை சென்றடைந்ததும் இவ் நினைவுச் சிலை திறந்து வைக்கப்படும் என அதிபர் அறிவித்துள்ளார்.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................................

முகவரி :- ..............................................

பிறந்த ஆண்டு :- ..............................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# ஆயிரம் பிறை கண்ட அதிபர் "ஒறேற்றர்"



சுத்தமான வெள்ளை வேட்டியும் நஷனலும் அணிந்து முழங்கால் வரை நீண்ட சால்வையும் சந்தனப்பொட்டும் இட்டு பொக்கு வாய் சிரிப்புடன் அவர் வந்தார். சுன்னாகம் சந்தியில் நீண்ட நேரம் வெடி ஓசை, 1958 - 1959 என நினைக்கிறேன். யாழ். மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதன் முறையாக ஒரு கிராமத்துப்பாடசாலை சம்பியன் ஆகியதும் உதைபந்தாட்ட வீரர்கள் குழுவுடன் "ஒறேற்றர்" என எல்லோராலும் அறியப்பட்ட ஸ்கந்தாவின் அதிபர் ஒறேறறர் சுப்பிரமணியம் சேர் சுன்னாகம் சந்தியில் பல மணிநேரம் காத்து நிற்க வேண்டியதாயிற்று வெடியோசை முடிந்ததும் மாணவர்கள் ஒறேற்றர் ஐயாவை தோளில் சுமந்து ஸ்கந்தாவின் வாசல் வரை கோஷம் எழுப்பியவாறு சென்ற காட்சியை நான் பல தடவைகள் நினைந்து மகிழ்வடைந்த துண்டு.

1944 ஆம் ஆண்டு "ஒறேற்றர்" ஸ்கந்தாவின் அதிபராக பொறுப்பேற்றார். 16 ஆசிரியர்களுடனும் 295 மாணவர்களுடனும் 15 வகுப்பறைகளையும் கொண்ட ஸ்கந்தாவைப் பொறுப்பேற்ற ஒறேற்றர் 1962 இல் ஓய்வுபெற்றபோது ஸ்கந்தா அன்னை 61 ஆசிரியர்களுடனும் 2045 மாணவர்களுடனும் 57 வகுப்பறைகளையும உள்ளடக்கி புதுப்பொலிவு பெற்றிருந்தமை அதிபர் ஒறேற்றரின் அதியுயர்ந்த சாதனை என கல்விமான்கள் அப்போது புகழாரம் சூட்டினர்.

முன்னாள் அதிபர் ஹன்டிபேரின்பநாயகம், செனட்டர் பி.நாகலிங்கம் போன்றோரின் ஆதரவுடன் "ஒறேற்றர்" இளைஞர் காங்கிரஸில் இணைந்தார். ஆயினும் கால்மாக்ஸின் மாக்சிய சித்தாந்தத்தில் மிகவும் ஈடுபாடு காட்டினார் ஸ்கந்தா விடுதியில் அனைத்து மாணவர்களுக்கும் 'சமபந்தி' சமபோசனம் என்னும் உன்னத - உயர்ந்த கொள்ளையை பலத்த எதிர்ப்புக்களின் மத்தியிலும் அமுல்படுத்தினார். இந்த மாற்றத்தால் யாழ.மண்ணில் மூலை முடுக்கெல்லாம் கல்வி என்ற தீபத்தை ஏற்றிவைத்த பெருமைக் குரியவராக ஒறேற்றர் போற்றப்பட்டார்.

**யாழ்.ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஒறேற்றர் சி.சுப்பிரமணியம் ஐயாவின் முழு அளவிலான சிலை இன்று கல்லூரி யில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதனை யொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது.**

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்கள் மாத்திரமின்றி தோட்டத்தொழிலாளர்களின் வறிய மாணவர்களுககும் ஸ்கந்தாவில் இடம்கொடுத்து - அவர்களுக்கு கல்வியுடன் ஊன உறையுள் இரண்டையும் வழங்கி கல்வியுலகின் ஒப்பற்ற அதிபராக பரிணமித்தார்.

இலங்கையில் எல்லாப் பகுதிகளில் இருந்தும் குறிப்பாக கொழும்பு, கண்டி, காலி, அம்பாந்தோட்டை, மாத்தளை, உட்பட பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் வந்து விடுதியில் தங்கியிருந்தமையால் ஸ்கந்தா ஒரு தேசிய பாடசாலையாக திகழ்ந்தது.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது அங்கு கல்வி கற்று வந்த ஒறேற்றர் இந்திய விடுதலை இயக்கத்தின் இலட்சியங்களாலும் கொள்கைகளாலும் கவரப்பட்டார். இந்திய சுதந்திர இயக்கம் எவ்வாறு நாட்டு மக்களிடையே ஒற்றுமையை செயற்படுத்த முனைப்புடன் செயற்பட்டதோ அவ்வாறு இலங்கை மக்களையும் சாதி, இன, மத, மொழி வேறுபாடின்றி ஒற்றுமைப்படுத்தி இலங்கைக்கும் பூரண சுதந்திரத்தை பெறமுடியும். என ஒறேற்றர் நம்பினார்.

1957 ஆம் ஆண்டளவில் ஸ்கந்தாவின் ஸ்தாபகர் நினைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஒறேற்றர இனக்கலவரங்களையும் அவற்றை விளைவிபபவர்களையும் கண்டித்ததுடன் தமிழர்களை சாவினின்றும் பாதுகாத்த சிங்கள மக்களையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

ஒறேற்றர் சுப்பிரமணியம் ஐயா (National Integration) தேசிய ஒருங்கிணைப்பின் மூலம் எமது மக்களுக்கு உயர்ந்த சேவைகளைச் செய்ய முடியும். என நம்பினார். எல்லா மக்களையும் ஒன்றாக இணைக்க வேண்டும். என்ற எண்ணம் கொண்டார். ஒறேற்றர் சொல்லில் மாத்திரமின்றி செயலிலும் அதைச்செய்து நிரூபித்தார்.

கல்வித்துறையில் முதன்மை பாடசாலையாக மிளிர்ந்த ஸ்கந்தா விளையாடடுத் துறையிலும் சாதனைகள் பலவற்றை சாதித்தது. 1958, 59 இல் உதைபந்தாட்ட JSSA சம்பியன்களாக ஸ்கந்தாவின் முதலாவது அணியினர் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் முன்னணி பாடசாலைகளுடன் நடந்த உதைபந்தாட்டங்களில் வெற்றி பெற்று யாழ்.மாவட்டத்திற்கு மாத்திரமின்றி கொழும்பு ஷகிரா கல்லூரியுடன் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியிலும் ஸ்கந்தா வெற்றி பெற்று சம்பியன் ஆகியது. இப்போட்டிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கல்லூரியின் முகாமையாளர் குடும்பததினருமான வி.தர்மலிங்கம் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

அக்காலத்தில் தேசிய பாடசாலைகளாக மூன்று பாடசாலைகளே யாழ்ப்பாணத்தில் திகழ்ந்தன. யாழ். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் யாழ. இந்துக் கல்லூரியும் என்பனவாகும்.

இத்துணை தரம் வாய்ந்த கல்லூரியாக ஸ்கந்தாவை உயர்த்தியவர் ஒறேற்றர் என எல்லோராலும் அறியப்பட்ட C.சுப்பிரமணியம் என்றால் அது மிகையாகாது.

ஆக்கம்:
ஸ்கந்தவரோதயன்
சபா புஷ்பநாதன்
சத்தியப்பிரமாண
மொழிபெயர்ப்பாளர்
துர்க்கா பொத்தகச்சோலை,
சுன்னாகம்.

# யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனமும் மனிதநேயப் பணியும்

**யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 27 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது.**



**அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டு வைத்திய சாலையை நாடி, அங்கு சத்திர சிகிச்சை மூலம் அவயவங்கள் அகற்றப் பட்டவர்கள் அவயவங் கள் செயற்பாடு குறைந்தவர்கள் எனப் பலரும் வலு விழப்புடன் கூடிய நிலையில் இயல்பு வாழ் வைப் பெறும் நோக்குடன் புனர்வாழ்வு நிறுவனம் ஒன்றை நாட வேண்டி தேவை எற்படுகின்றது.**

**வலுவிழப்புத் தொடர் பாக 1980 ஆம் ஆண் டின் ஐ.நா. சமவாயத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இன்றைய காலத்தில் போட்டி மனப்பான்மை, இலாப நோக்கம் மனிதமாண்பை மதியாமை, சுரண்டல் ஆகிய அநாகரிக சுயநலன்கள் மலிந்துள்ள சூழ்நிலையில் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் எந்தவிதமான வர்த்தக நோக்கமுமின்றி ஆற்றுகின்ற பெரும்பணிகள் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.**

**சுயநலன்களால் மனித நேயத்தையே மறந்து வாழும் மனிதர்களுள் எந்த விதமான பிரதிபலனையும் எதிர்பாராது பண்புடன் சேவையாற்றிவரும் அன்னையர்களைக் கொண்ட முகாமைத்துவக் குழுவினருக்கு மாற்றுத்திறனாளிகள் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**செ.பிரிந்தாபரன்**
**பயனாளியும் பணியாளரும்**

## செபத்துடன் கூடிய வாழ்த்துக்கள்

நான் ஒரு நீரிழிவு நோயாளி இந்த நிறுவனத்தின் மூலமாக இரண்டு தடவை விசேட பிரத்தியேக பாதணியை பெற்று நலம் அடைந்துள்ளேன்.

எப்போதும் இன்முகத்துடன் பாதிக்கப்பட்டவர்களை அன்போடு அணுகும் இவர்களுக்கு எமது செபத்துடன் கூடிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*அருட்பணி*
*லா.செபஸ்ரியான் குருஸ்*

## ஜெய்ப்பூர் தந்த கொடை

கந்தையா கிருஸ்ணகுமார் ஆகிய நான் 14 வயதாக இருக்கும் பொழுது விமானக் குண்டுத் தாக்குதலினால் எனது இடது காலை முழங்காலுக்கு கீழ் இழந்ததுடன் வலது காலிலும் பெருவிரல் தவிர்ந்த நான்கு விரல்களையும் இழந்தேன்.

எனது கல்வியைத் தொடர முடியாததால், எனது எதிர்காலம் கேள்விக்குறியாக அமைந்திருந்த வேளை இந்த நிறுவனத்தில் எனக்கு தொழில்நுட்ப பயிற்சியளித்து தொழில்நுட்ப உதவியாளராக நியமனம் வழங்கியதை என்றும் மறக்க முடியாது.

*கந்தையா கிருஷ்ணகுமார்*
*பயனாளியும் பணியாளரும்*

## கல்வியை தொடர முடிந்தது

செல்வி சின்னராசா தரணியா ஆகிய நான் 2 வயதாக இருக்கும் போது எறிகணைத் தாக்குதலினால் எனது வலது காலை இழந்தேன்.

அதன் பின்பு யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் சென்று செயற்கை கால் பொருத்தினேன். அன்றிலிருந்து இன்றுவரை யாழ்.ஜெயப்பூர் நிறுவனத்தின் பயனாளியாக இருந்து வருகின்றேன். நான் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றேன்.

எனக்கு செயற்கை கால் பொருத்தியதன் பயனாகவே தான் முழு மனிதனாக வேலைகளை செய்ய முடிகின்றது.

*செல்வி சின்னராசா தரணியா*
*பழைய பொலிஸ் நிலைய வீதி*
*வல்வெட்டித்துறை.*

## தொலைந்த வாழ்வு திரும்பியது

நான் கால்களை இழப்பதற்கு முன்னர் பாரவூர்தி செலுத்துவதையே எனது தொழிலாகக் கொண்டிருந்தேன். அனால் மிதிவெடியின் தாக்கத்தால் காலினை இழந்து தவித்தபோது எனது வாழ்க்கையையே தொலைந்து விட்டதாக எண்ணினேன். இனி நான் எந்தத் தொழிலும் செய்யமுடியாது என்றும், எனதுவாழ் நாளின் மிகுதிக் காலத்தை இன்னொருவரில் தங்கியே வாழவேண்டி இருக்கும் என எண்ணி மிகுந்த வேதனையில் இருந்தபோதுதான் ஜெய்ப்பூரின் சேவையை அறிந்து அதன் மூலம் கால் பொருத்தி நடமாடி வருகின்றேன்.

*இ.சிவநாதன்*
*ஜெய்ப்பூர் நிறுவன பயனாளியும் சாரதியும்.*

## வாழ்வுக்கு வளம் சேர்த்த நிறுவனம்

செல் விழுந்து வெடித்ததில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற வைத்தியசாலைக்கு குறித்த நேரத்துக்குள் செல்ல முடியாததால் காலை இழக்க வேண்டியேற்பட்டது.

இந்நிலையில் எம்மிடம் இருந்து உதவி ஏதும் பெறாமல பிளாஸ்ரிக்கினால் கால் அமைத்து பொருத்தி நடப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றுவதற்கு உதவி செய்தும் சகலதும் சரியாக உள்ளதா எனப் பார்த்தும் தொழில்நுட்பவியலாளர்கள் திறம்பட அமைத்து தந்த காலுடன் புதிய நடையுடனும் வெளியே வந்தேன்.

*இ.அ.ஆனந்தராசா- பயனாளி*

## வாழ்வில் ஒளியேற்றுபவர்கள்

வாழ்க்கை என்பது இன்ப துன்பம் நிறைந்தது என எனக்குத் தெரியும். வசந்தம் வீசிய என் வாழ்விலும் புயல் அடித்தது.' நாட்டில் ஏற்படட போரின் போது பாதிககப்படடவர்களில் நானும் ஒருவன். சரிந்து போன என் வாழ்க்கையை நிமிர வைத்தது ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்.

இன்று நான் வலது கையை இழந்து ஏனையோருக்கு எவ்விதத்திலும் சளைத்தவனாக இல்லாது வாழ்வதற்கு இந்தச் செயற்கைக் கை உதவுகின்றது என்றால் அது மிகையில்லை.

*தங்கவடிவேல் பரந்தாமன் - பயனாளி*

## தேசத்தின் கலங்கரை விளக்கு

போலியோ நோயினால் இடது கால் செயலற்று வலுவிழந்து வாழவே இருண்டிருந்த வேளையில் கலங்கரை ஒளிவிளக்காய் எனக்குள் நம்பிக்கை ஒளி ஊட்டினார்கள். கடந்த 27 வருடகாலமாக என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பணியாற்றிவருவதைப் பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன். யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தால் உயர்நிலைக்கு கொண்டுவரப்பட்ட மாற்றுத்திறனாளிகளில் நானும் ஒருவன்.

*எல்.எம்.ஜோன்சன்*
*பயனாளியும் பணியாளரும்*

# கல்வி நடவடிக்கைகளுக்கு மண்டபம் இலவசம்

(யாழ்ப்பாணம்)

கல்விசார் நிகழ்வுகளை நடத்துவதற்கு வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தை இலவசமாக வழங்குவதற்கு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் ச.சிவகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச சபைகளில் வசதிகளுடன் கூடிய கலாசார மண்டபம் எமது பிரதேச சபையின் கீழுள்ளது. இந்த மண்டபம் தனிப்பட்ட மற்றும் பொது நிகழ்வுகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் மேற்படி மண்டபத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டங்கள், மற்றும் வலி.தென்மேற்கு இளைஞர் கழகத்தினரின் கல்விக் கருத்தரங்குகள் உள்ளிட்ட பல கல்விசார் நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

அவ்வாறான கல்விசார் நிகழ்ச்சிகளை நடத்துபவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், கல்வி நடவடிக்கைகளுக்கு பிரதேச சபை பங்களிப்பு வழங்கவேண்டும் எனக்கருதியும் இனிவருங் காலங்களில் கல்விசார் நடவடிக்கைகளுக்கு மண்டப வாடகை அறவிடுவதில்லையெனத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இருந்தும், மண்டபத்திற்கான மின்சாரம் மற்றும் பராமரிப்பாளரின் கூலியாக 500 ரூபா மட்டும் அறவிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



**சேவைக்காலம் நிறைவடைந்து இன்றுடன் ஓய்வுபெறவிருக்கும் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் நேற்று சந்தித்தபோது...**

## வீதி விபத்தில் நால்வர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை - வவுனியா பிரதான வீதியின் மகதிவுள்வெள குளத்துப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

குறித்த பகுதியில் டிப்பர் வாகனம், கெப் ஒன்றுடன் மோதியதில் இவர்கள் நேற்றுக் காலை காயமடைந்தனர்.

இவர்கள் மகதிவுள்வெள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கிண்ணியா பழைய வைத்தியசாலை சந்திப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில் படுகாயமடைந்த ஒருவர், கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். டிப்பர் வாகனமும், சைக்கிளொன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

# கார்கில்ஸ் வங்கி நேற்று முதல் ஆரம்பம்

இலங்கையில் அங்கீகாரம் பெற்ற 23 ஆவது வணிக வங்கியான கார்கில்ஸ் வங்கி தனது உத்தியோகபூர்வ செயற்பாடுகளை நேற்று ஆரம்பித்தது.

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த வங்கியை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோர் திறந்துவைத்தனர். 5 பில்லியன் ரூபா முதலீட்டில் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வங்கியானது கார்கில்ஸ் பி.எல்.சி. மற்றும் சிடி ஹொல்டிங்ஸ் பி.எல்சி. ஆகியவற்றின் இணை அங்கத்துவ நிறுவனமாகும்.

இதன் தலைமையகம் இல. 696, காலி வீதி, கொழும்பு - 3 எனும் முகவரியில் அமைந்துள்ளது. அத்துடன் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஹரிஸ் பிரேமரட்ன, பதில் முகாமைத்துவப் பணிப்பாளர் தேவா ரொட்ரிகோ, கார்கில்ஸ் பி.எல்.சி.யின் தலைவர் லூவிஸ் பேஜ், பதில் தலைவர் ரஞ்சித் பேஜ், மற்றும் பல அதிதிகள் நேற்றைய நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இரத்மலானை...

இப்பள்ளிவாசல் 67 வருடமாக இருந்துவருகின்றது. எனினும் இதுகாலவரை எந்தவொரு அசம்பாவிதமும் இடம்பெறவில்லை. அண்மைக்காலமாக முஸ்லிம்கள் மீதும், பள்ளிவாசல்கள் மீதும் தொடரான தாக்குதல்கள் நடந்து வரும் நிலையில் இப்பள்ளி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரத்மலானை விமான நிலையம் அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயத்தில் இப்பள்ளிவாசல் அமைந்துள்ளது. இந்த வீதியால் அதிகாலை 1.30 மணியளவில் சென்றவர்கள் யார் என்பதை அப்பகுதியிலுள்ள பாதுகாப்புக் கமராக்கள் மூலம் கண்டுபிடிக்க முடியுமென்பதால் இது சூத்திரதாரிகளை இலகுவாக கண்டுகொள்ள முடியுமென அசாத் சாலி தெரிவித்தார்.

## ஞானசார தேரரின்...

வழங்கப்பட்டிருந்த அமெரிக்காவுக்கான விசாவில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதிலிருந்து அமெரிக்காவின் ஜனநாயகம் வெளிப்பட்டுள்ளது. சிங்கள பௌத்தம் இலங்கையில் பெரும்பான்மையானதாக இருந்தாலும் உலகிலேயே சிறிய இனமாகும். அதேபோல மக்களுக்காக குரல்கொடுக்கின்ற எங்களுக்கு அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றார்.

ஞானசார தேரர், பொதுபல சேனா அமைப்பை நிறுவுவதற்கு முன்னர் அமெரிக்காவுக்கு செல்வதற்கு ஐந்து வருடங்களுக்கு விசா வழங்கப்பட்டிருந்தது. அந்த விசா காலாவதியாவதற்கு இன்னும் ஒன்றரை வருடங்கள் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வடமாகாண சபை...

எழுதிய கடிதங்களின் நிழற்பிரதியினையும் இத்துடன் முன்னிலைப் படுத்துகின்றேன். வடமாகாண சபையின் 38 உறுப்பினர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

மேற்குறித்த கடிதத்தின் அடிப்படையில் உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. உறுப்பினர்களான அனந்தி சசிதரன், பாலச்சந்திரன் கஜதீபன், மற்றும் சந்திரலிங்கம் சுகிர்தன் ஆகியோரின் வேண்டுகோள்களுக்கிணங்க பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற வடமாகாண சபை அமர்வின் போது, மேற்படி உறுப்பினர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு திடீரென மீளப் பெறப்பட்டுள்ளன என முறையிட்டுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதய வடமாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனக்கு வழங்கப்பட்டிருந்த (எம்.எஸ்.டி) பாதுகாப்புச் சேவையும் மீளப் பெறப்பட்டுள்ளதாக முறையீடு செய்துள்ளார்.

இம்முறைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு அதிமேன்மைதங்கிய தங்களுக்கு இவ்விடயத்தினை முன்னிலைப்படுத்துவதுடன், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் இதனைச் சமர்ப்பித்து குறிப்பிட்ட உறுப்பினர்கள் நால்வருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வசதிகளை மீளப் பெற்றுக்கொடுக்கக் கோருவதெனவும், ஏனைய உறுப்பினர்களினால் கோரிக்கைகள் விடுக்கப்படும் பட்சத்தில் அவர்கள் எல்லோருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கக் கோருவதெனவும் வடமாகாண சபை தீர்மானித்துள்ளதாக அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

## கருங்குளவிகள்...

19) ஆகியோரே காயமடைந்து சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## மீன்பிடி...

மொனாச் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன இம்மாநாட்டுக்கு தலைமை வகிப்பார்.

மத்திய அரசுக்கும் மாகாண சபை அமைச்சுக்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதும் மாகாண மீன்பிடி நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதும் இந்த மாநாட்டின் நோக்கமாகும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இலங்கையில் மீன் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக மாகாண மட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் இம்மாநாட்டில் இடம்பெறும் என கடற்றொழில் அமைச்சின் ஊடகப் பேச்சாளர் ஸ்ரீநரேந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

## விவசாயத்...

மேற்கொள்ளப்படுகின்றன. இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகளை கிராம அலுவலர்களே மேற்கொள்ளவுள்ளமையால் அவர்களுக்கு இது தொடர்பில் விளக்கமளிக்கும் செயலமர்வு நாடு பூராகவும் நேற்றுமுதல் இடம்பெற்று வருகின்றன.

கிராம அலுவலர்களுக்கான விளக்கங்களை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள அதிகாரிகள் வழங்கி வருகின்றனர். அதன்படி விவசாய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவடையவுள்ளன. இந்த தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் 10 வருடங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுத்திகரிப்பு...

வேண்டும், வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஆளணி அதிகரிக்கப்படவேண்டும், வவுனியா நகரசபையால் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காவல்கடமை பதவிகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும், உள்ளக வெற்றிடங்கள் உள்ளக தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும், 30 வருடங்களாக பணியாற்று பவர்களுக்கு இது வரை தர உயர்வு வழங்கப்படாமையினால் அரச சுற்றுநிருபம் 01- 2001 இற்கு அமைவாக தரமுயர்த்தல் வழங்கப்படவேண்டும், வேறு திணைக்களங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும், தொழிலாளர்களுக்கு சாப்பாட்டறை கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். தொழிலாளர்களுக்கான மலசலகூடம் புனரமைப்பு செய்து தரப்படவேண்டும். அந்தந்த இடங்களில் பணிபுரிபவர்கள் அங்கேயே பணி புரிவதற்கு அனுமதிக்கப்படவேண்டும். சுகாதார பகுதி நலன் புரிச்சங்கத்திற்கு நகரசபையால் சலுகைகள் வழங்கப்பட வேண்டும், உமா எனப்படும் சுகாதார தொழிலாளியை தொழிலாளிகளுடன் பணியாற்ற அனுமதிக்க வேண்டும், வட மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் சுகாதார தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கப்படவேண்டும் என்று 12 கோரிக்கைகளை முன்வைத்து இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## இலங்கையில்...

விசாரணையாளர்களுடன் தொடர்புகொள்வதை தடுப்பது என்பது மிகவும் சிரமமான விடயமாகத் தான் இருக்கும். அரசாங்கம் மக்களைத் தடுக்க நினைத்தால், அரசாங்கத்துக்குத் தான் அது பாதகமாக வந்துமுடியும் என்றார் அஸ்மா ஜெஹாங்கிர்.

எல்லாத் தரப்பினரும் புரிந்துள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தம்து விசாரணைக் குழு பக்கச்சார்பற்ற முறையிலும் சுயாதீனமாகவும் விசாரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அரசாங்கம் தடுத்தாலும் மக்கள் தம்மோடு தொடர்புகொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டுகொள்வார்கள் என்றும் பாகிஸ்தானிய வழக்கறிஞர் அஸ்மா ஜெஹாங்கிர் கூறினார்.

அரசாங்கங்கள் ஒத்துழைப்பு வழங்காதிருந்த பல சர்வதேச விசாரணைகளை இதற்கு முன்னர் தாம் நடத்தியிருப்பதாகவும் விசாரணைக்குழு வல்லுநர் ஜெஹாங்கிர் தெரவித்தார்.

தமக்கு இரகசியமாக தகவல்களை அளிப்போரின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். தமது விசாரணைகள் வரும் ஆகஸ்ட் முதல் இரண்டு வாரங்களில் தொடங்கும் வாய்ப்புள்ளதாகவும் அஸ்மா ஜெஹாங்கிர் கூறினார்.

தமது பரிந்துரைகள் அடங்கிய விசாரணை அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையே அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி முடிவெடுக்கும் என்றும் வழக்கறிஞர் ஜெஹாங்கிர் பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கை மீதான சர்வதேச விசாரணையை நடத்தவுள்ள அஸ்மா ஜெஹாங்கிர், மார்ட்டி அத்திசாரி, சில்வியா கார்ட்ரைட் இலங்கை மீதான சர்வதேச விசாரணையை நடத்தவுள்ள ஐ.நா. விசாரணைக்குழுவுடன் தொடர்புகொள்ளும் மக்களை அரசாங்கம் தடுக்க முயன்றாலும் தமது விசாரணைகள் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படும் என்று அந்த விசாரணைக் குழுவின் வல்லுநர்களில் ஒருவரான அஸ்மா ஜெஹாங்கிர் தெரிவித்துள்ளார்.

மக்களை எதேச்சாதிகாரமாக தடுக்க முயல்வது அரசாங்கத்துக்கே பாதகமாக அமையும் என்றும் அஸ்மா ஜெஹாங்கிர் பி.பி.சிக்கு அளித்துள்ள பிரத்தியேக செவ்வியில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கமுடியாது என்று தீர்மானம் எடுத்துள்ள இலங்கை அரசாங்கம், அந்த விசாரணைக் குழுவுடன் தொடர்புகொள்பவர்களுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அண்மையில் அறிவித்திருந்தது.

# மன்னாரில் கால்வாய் திட்டம் கைவிடப்படும் அபாயம்

மன்னாரில் 60 மில்லியன் ஈரோ நாணய பெறுமதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்பட்ட கால்வாய் திட்டம் செயலிழக்கும் அபாயத்தில் உள்ள மன்னார் சிரேஷ்ட அரச அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எஸ்.ரி.டி.பி. திட்டத்தின் கீழ் வவுனியா - மன்னார் கால்வாய் திட்டம் பாரிய நிதி ஒதுக்கீட்டில் 2012 இல் ஆரம்பிக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சும், யுனொப்ஸ் நிறுவனமும் இணைந்த வகையில் திட்டம் முன்னெடுக்கப்பட்ட போது சிறு பிரச்சினை கால்வாய் தொடர்பாக ஏற்பட்டு உடனேயே முடிவுக்கு வந்தது.

எனினும் பிரச்சினைக்குரிய தீர்வு எட்டப்பட்டு 6 மாதம் முடிவடைந்ததும், இன்றும் உட்கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இன்றும் 18 மாதங்களில் இவ் உட்டுகட்டுமான வேலைகள் பூர்த்தியடைந்து எஸ்.ரி.டி.பி. திட்டம் உரியவர்களிடம் கையளிக்க வேண்டும்.

ஆனால் இவ் ஒப்பந்தத்தை எடுத்தவர்கள் கடந்த ஆறு மாதங்களாக ஆரம்பிக்கப்படாத சூழலே அவதானிக்கப்படுகிறது.

மன்னார் நகரப் பகுதியில் கால்வாய் வேலை உடன் ஆரம்பிக்காது விட்டால் இவ் 60 மில்லியன் ஈரோ நிதிக்கு என்னவாகிவிடும் எனப் பலரும் கேள்வி எழுப்பி வருகின்கின்றனர்.

மேற்படி மன்னார் நகரப் பகுதி கால்வாய் வேலைத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது குறித்து கொழும்பில் உள்ள ஐரோப்பிய நிறுவனத்தின் தலைமை அதிகாரியின் கவனத்திற்கு மன்னார் பிரதேச ஐந்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அவசர கடிதம் எழுதவுள்ளதாகவும்,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர், மன்னார் அரச அதிபர் ஆகியோரின் அவசர கவனத்திற்கு கொண்டுவர துரித நடவடிக்கைகள் இடம்பெற்று வருவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (92)

# புலிகள் அழிக்கப்பட்டதால் ஆசியாவுக்கு அதிக நன்மை

### ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் புலிகள் அழிக்கப்பட்டமை ஆசிய நாடுகள் அனைத்துக்கும் நன்மை பயக்கும் ஒன்றாகும் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டமையால் இலங்கையில் இப்போது பொருளாதாரம் முன்னோக்கி நகர ஆரம்பித்து விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடல் பற்றி அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பாக நேற்று கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் நாட்டின் பெரிய பிரச்சினையாகும். இதனால் தெற்காசிய நாடுகள் பொருளாதாரத்தையும் நன்மையையும் இழந்து வருகின்றன. ஆனால், இலங்கை பயங்கரவாதத்தை ஒழித்ததால், தற்போது எவ்விதப் பிரச்சனைகளுமின்றி பொருளாதாரத்தில் சிறந்து விளங்குவதாக அவர் தெரிவித்தார்.

# நிலைத்து நிற்கும் அபிவிருத்தி புதிய பொறிமுறை உருவாக்கம்

### ஆளும்கட்சியின் மாநாடு கொழும்பில்

அரசின் செயற்றிட்டங்களை விரைவுபடுத்துவதற்கும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்குமான விசேட செயலமர்வு ஒன்று பேருவளையில் நேற்று இடம்பெற்றது. காலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிற்பகலில் ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இந்த செயலமர்வு ஊடாக கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக ஆளும்கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உடைந்த இராட்சியம், ஆச்சரியத்தை நோக்கி பயணிக்கும் முறைமை என்ற தலைப்பில் நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர உள்ளிட்ட கல்விமான்களால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நேற்று மாலை ஆரம்பித்த இந்த செயலமர்வில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. இது தவிர, எதிர்காலத்தில் எவ்வாறான தேர்தல் ஒன்றிற்கு செல்ல வேண்டும் என்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து எழுத்து மூலமான கருத்துக்களை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# பண்டார வன்னியன் நினைவு தின ஏற்பாடு

வன்னியை ஆண்ட இறுதி மன்னனான பண்டாரவன்னியனின் நினைவு தினத்தை ஆண்டு தோறும் ஓகஸ்ட் மாதத்தில் அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளதாக வவுனியா நகரசபை செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கோரிக்கைய்ய வவுனியா நகர வரியிறுப்பாளர்கள் சங்கம், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், பண்டாரவன்னியன் நற்பணி மன்றம், வன்னி மக்கள் முன்னேற்றக்கழகம், வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், சிக்கன கடன் கூட்டுறவுச்சங்கம் ஆகிய அமைப்புகள் ஒன்று சேர்ந்து விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வன்னி பிரதேசத்தின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் நினைவுதினம் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்ட ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி இதுவரை காலமும் நகரசபையினால் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

இதனால், இத்தினத்தை விடுத்து வெள்ளையனிடமிருந்து முல்லைத்தீவு கோட்டையை தகர்த்த நாளான ஓகஸ்ட் 25ஆம் திகதி அனுஷ்டிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையை நகரசபை கவனத்தில் எடுத்துள்ளதுடன் எத்தினத்தில் பண்டாரவன்னியன் தினத்தை அனுஷ்டிப்பது என்பது தொடர்பாக எதிர்வரும் தினங்களில் பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறைக்கைதி தப்பியோட்டம்

கொழும்பு, வடக்கு ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சிறைக்கைதியொருவர் பாதுகாவலில் இருந்து நேற்றுக் காலை தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொரளையைச் சேர்ந்த 29 வயதுடைய சிறைக்கைதியே இவ்வாறு தப்பியோடியவரா வார்.

இவர் 1.5 கிலோ கிராம் ஹெரோயின் வைத்தி ருந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்.

மேலும் தப்பிச் சென்ற சிறைக்கைதியின் வலது கையில் பச்சை குத்தியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கைதி தொடர்பான தகவல்கள் பொதுமக்களுக்கு தெரியவருமாயின் 011-2957197 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# உலகக்கிண்ண கால்பந்து

### காலிறுதியில் பிரான்ஸ்

பிரேசிலில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் நேற்று நடந்த போட்டியில் 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் நைஜீரியாவை வீழ்த்தியது பிரான்ஸ். இதன் மூலம் காலிறுதிக்கு பிரான்ஸ் தகுதிபெற்றது.

# கலந்துரையாடல்

அனர்த்த முகாமைத்துவம் (ஆபத்து) தொடர்பான உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு மாவட்ட மட்டத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் இதற்கான விபரங்களைத் திரட்டி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் உள்ளூராட்சி சபையின் அனர்த்த தணிப்பு, அனர்த்த முன்னாயத்தம், அனர்த்த முன்னெச்சரிக்கை, ஆபத்துக் குறைப்பு போன்ற விசேட தலைப்புக்களில் இன்று பட்டறை இடம்பெறும்.

மேற்படி பயிற்சி நெறிக்கு உள்ளூராட்சிச் சபைகளில பணியாற்றும் அபிவிருத்தி உதவியாளர், தொழில்நுட்ப அலுவலர் உட்பட ஒவ்வொரு சபையிலும் இருந்து மூவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ பட்டறையின் இணைப்பாளர் ச.ரவி இதற்கான விரிவுரைகளை ஒழுங்கு செய்து நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (92)

# சித்தன்கேணி சிவாலயத்தில் வியாழனன்று பஞ்சரதப் பவனி

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சித்தன்கேணி தனுவோடைப்பதி சிவன் ஆலயத்தின் மூன்றாம் வீதியில் ஐங்கேந்திர (ஐந்து) தேர்கள் ஒரே நேரத்தில் வீதி உலாவரும் சிறப்பு எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும்.

வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பஞ்சரத பவனியை பார்வையிட பக்தர்கள் திரளவுள்ளனர்.

அன்றைய தினம் ஐந்து தேர்களிலும் பிள்ளையார், நடராஜர், சிவகாமி அம்மன், முருகன், சண்டேஸ்வரர் என்ற ஒழுங்கில் வீதி உலாவரும் என ஆலய பிரதமகுரு வித்தியானந்த சேகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

சிவகாமி அம்மனுக்கான தேரை பெண்களே தனித்துவமாக இழுத்துச் செல்லும் காட்சி மூன்றாம் வீதியில் இடம்பெறும்.

காலை 8.30 மணிக்கு ஐங்கேந்திர தேர்ப்பவனி ஆரம்பமாகும். (92)

# மாத்தளை புதைகுழியின் கதை; நூல் வடிவில் வெளியீடு

(கொழும்பு)

மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பில் சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பான தகவல்கள் அடங்கிய நூல் ஒன்று நேற்று முன்தினம் மாத்தளை அரங்கில் வெளியிடப்பட்டது.

மாத்தளை மனித புதைகுழி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அது தொடர்பான விசாரணைகள் போன்றவை இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் எம்.டபிள்யூ. சோமரட்ன என்பவரால் இந்த நூல் தொகுத்து எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மாத்தளை மர்மப் புதைகுழி என நாமம் இடப்பட்ட இந்த நூல் வெளியிடப்பட்ட போது பல அரசியல் பிரமுகர்கள் உட்பட பல கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அளுத்கம வன்செயல் பாதிப்பு ஜனாதிபதி பார்வையிட்டார்

தென்பகுதியில் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட இடங்களை ஜனாதிபதி நேற்று இரண்டாவது முறையாகவும் பார்வையிட்டார். இலங்கையின் தென்பகுதியில் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட இடங்களை ஜனாதிபதி நேற்று இரண்டாவது முறையாகவும் பார்வையிட்டார்.

இந்த இடங்களில் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாணப் பணிகளை பார்வையிடும் நோக்கிலேயே அவர் அங்கு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தின் போது பல அமைச்சர்களும் உடன் சென்றிருந்தனர்.

இதன்போது ஜனாதிபதி, பாதிக்கப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை சந்தித்து கலந்துரையாடினார்.

# விபத்தில் சிக்கி ஒருவர் படுகாயம்

இணுவில் சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிற்றூர்தி வண்டியொன்றுடன் மோட்டார் சைக்கிளொன்று நேருக்கு நேர் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தின் போது மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த மல்லாகத்தினைச் சேர்ந்த வி.சுதாகரன் (வயது-32) என்பவரே படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.